# உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமாகும்



பாஸ்டர் D. மோகன்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமாகும்

## இன்றைய முக்கிய தேவை அதுவே

பாஸ்டர் D. மோகன்

புதுவாழ்வு ஏ.ஜி. சபை
சென்னை-600 015

# உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமாகும்

Copyright by © 2002 New Life Publishers

Vasanth Prints
Chennai - 600 006.
Phone : 2435 5802
Mobile : 94440 12139

---

வெளியிடுபவர்கள்:
நியு லைப் பப்ளிஸர்ஸ்,
191, அண்ணாசாலை,
சின்னமலை,
சென்னை-15

புத்தகங்கள் கிடைக்குமிடம்:
புதுவாழ்வு இலக்கிய ஊழியம்,
புதுவாழ்வு ஏ.ஜி. சபை,
191, அண்ணாசாலை,
சின்னமலை, சென்னை-15.

# முகவுரை

உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமாகும் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகத்திற்கு முகவுரை எழுதுவதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

பாஸ்டர். மோகன் அவர்களை கடந்த 30 ஆண்டுகளாக அறிவேன். இத்தனை ஆண்டுகளும் இருவரும் இணைந்து பல்வேறு ஊழியங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

பாஸ்டர் மோகன் அவர்கள் ஓர் சிறந்த ஜெபவீரர். தேவன் அவர்களை வல்லமையாய் பயன்படுத்தி வருகின்றார். ஜெபத்தைக் குறித்து புத்தகம் எழுத ஏற்ற தேவ மனிதர் அவர். ஜெபம் என்றால் என்ன? ஜெபமின்மை என்றால் என்ன? ஜெபத்திற்கு வரும் தடைகள் என்ன? ஒழுங்காக ஜெபம் செய்வது எப்படி? ஜெபபாரம், பவுல் சபைக்காக செய்த ஜெபம் போன்ற ஜெபத்தைக் குறித்ததான பல்வேறு விஷயங்களை அனுபவப்பூர்வமாக எழுதியுள்ளார்கள்.

இந்தப் புத்தகத்தை பல்லாயிரம் மக்கள் வாசித்து, ஜெபித்து மறுரூபமடையவும், சபைகளில் எழுப்புதல் உண்டாகவும் வாழ்த்தி, ஜெபிக்கின்றேன்.

இயேசுகிறிஸ்துவின் பணியில்,
P.S. ராஜாமணி
தலைவர், ஏ.ஜி.சபைகள், தமிழ்நாடு

ஜனவரி 2002
மதுரை

# முன்னுரை

உங்கள் "ஜெப வாழ்வு மறுரூபமாகும்" என்னும் புத்தகம் எழுத தேவன் அளித்த கிருபைக்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இதன் மூலம் அநேகருடைய ஜெபவாழ்வு மறுரூபமடைய வேண்டும் என்பதே என் வாஞ்சையும், ஜெபமுமாயிருக்கிறது. தேவனுடைய நாமம் இதன் மூலம் மகிமையடையட்டும்.

நான் இரட்சிக்கப்பட்ட நாட்களில் ஜெபிக்கும் ஓர் பரிசுத்தவானோடு ஊழியம் செய்ய என் தேவன் ஏனக்கு சிலாக்கியம் கொடுத்தார். அவரோடு தங்கியிருந்து ஊழியம் செய்தேன். இரவு எத்தனை மணிக்கு எழுந்தாலும் அவர் தூங்காமல் பல மணிநேரம் ஜெபிப்பார். அவருடைய முகம் பிரகாசமாய் இருப்பதை நான் கண்டேன். எனக்கும் ஜெபிக்கும்படி அளவில்லா ஆசையை கர்த்தர் கொடுத்தார். என் வாழ்க்கையில் கர்த்தரின் சந்திப்பு, அவருடைய இனிய சத்தம் கேட்பது, அவர் தந்த அழைப்பு, அவர் கொடுத்த திட்டங்கள், ஜெபத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள் ஏராளம் கர்த்தர் தந்தார். கர்த்தர் எனக்கு கொடுத்த என் மனைவி கெட்சியாள் ஜெபிக்கும் ஓர் மனைவி. சபையில் ஜெபம் நடத்துவதும், முழு இரவும்

ஜெபிப்பதும், என்னோடு சேர்ந்து ஜெபிப்பதும், ஜெபத்தின் பலனை அனுபவிப்பதும், கர்த்தர் கொடுத்த கிருபை.

சபையிலும் கர்த்தர் ஜெபிக்கும் நல்ல உடன் ஊழியர்களையும், விசுவாசிகளையும் கர்த்தர் எனக்குத் தந்தார். சபை இரவு பகலாய் ஜெபித்து எழுப்புதலைக் காண கிருபை தந்தார். சபையில் கொடுத்த ஏராளமான ஜெபத்தை குறித்த செய்திகளும் எனக்கு தூண்டுதலாக இருந்தது. மேலும் சகோ. டேனி போமம் அவர்களின் ஜெப வாழ்க்கை, என் வாழ்க்கையில் என்னை அதிகமாக ஜெபிக்க தூண்டும் முன்மாதிரியாக இருந்தது. கர்த்தர் எனக்கு கொடுத்த செய்திகள், அனுபவங்கள் சகோ. ஜான்மேக்ஸ் வெல், டேனிபோமம், உலகத்தை மாற்றி அமைக்கும் ஜெபபள்ளி என்ற புஸ்தகங்களில் சில கருத்துக்களை சேர்த்து இப்புத்தகம் எழுத தேவன் எனக்கு கிருபை அளித்தார்.

இப்புத்தகம் எழுத எனக்கு அதிகமாய் ஊக்கம் அளித்த திரு. ஹரோல்ட் சைமன் அவர்களுக்கு என் நன்றி. அவர்களோடு சேர்ந்து திருமதி. லீலாவதி ஹரோல்ட், மற்றும் புத்தக அலுவலகத்தில் ஊழியம் செய்யும் உதவியாளர்களுக்கும் நன்றி.

கர்த்தர் இப்புத்தக வாயிலாக தம் ஆவியின் மூலம் உங்கள் ஜெப வாழ்க்கையை மறுரூபப்படுத்துவாராக

**கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.**

இப்படிக்கு,
Rev. D. மோகன்,
கர்த்தரின் பணியில்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜெபம் என்றால் என்ன? | 7 |
| 2. | ஜெபமின்மை என்றால் என்ன? | 16 |
| 3. | ஜெபத்திற்கு வரும் தடைகள் என்ன? | 25 |
| 4. | ஒழுங்காக ஜெபம் செய்வது எப்படி? | 35 |
| 5. | மாதிரி ஜெபங்கள். | 46 |
| 6. | பரிசுத்த பவுலின் ஜெபம். | 62 |
| 7. | ஜெபபாரம் | 80 |
| 8. | முடிவுரை | 90 |

# 1. ஜெபம் என்றால் என்ன ?

ஜெபம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. அது மிகவும் முக்கியமான ஓர் பெரிய பாடமாகும். இயேசு தம் சீஷர்களுக்கு பிரசங்கிக்க கற்றுக் கொடுக்கவில்லை அவர் ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். ஜெபம் என்றால் என்ன என்பதை எளிய முறையில் விளங்கிக் கொண்டு அதை அனுபவமாக்கினால் வாழ்க்கை மறுரூபமடையும்.

## 1-1 ஜெபம் என்பது தேவ பிரசன்னத்தை உணர்வது

அவர் சமூகம் நமக்கு பேரின்பத்தை கொண்டு வரும்.

**சங் 16:11** ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர், உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

**அப் 2:25-28** அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன், நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே

இருக்கிறார். அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும், என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர், ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர். உம்முடைய சந்நிதானத்திலே என்னை சந்தோஷத்தினால் நிரப்புவீர்.

ஜெபத்தில் அவர் பிரசன்னத்தை உணரும்போது இருதயம் மகிழும், நாவு களிகூறும், வாழ்க்கை வாழ்வதற்கும் நம்பிக்கை வரும். சந்தோஷத்தினால் அவர் நிரப்புவார். அவர் உன் வலதுபாரிசத்தில் நெருங்கி இருக்கிறார் என்ற அனுபவங்கள் உண்டாகும். இந்த புஸ்தகத்தை வாசிக்கும் நீங்கள் இப்பொழுது இந்த அனுபவத்தை அடைய ஆவியானவர் வாஞ்சிக்கிறார். ஒரு தனி இடம் தெரிந்தெடுங்கள். உங்கள் மனசாட்சியில் உறுத்தும் பாவங்களை அறிக்கை செய்யுங்கள். இயேசுவின் இரத்தம் உங்களை உடனே சுத்திகரிக்க வல்லமை உள்ளது என்பதை விசுவாசியுங்கள்.

**எபிரேயர் 9:14** நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

உங்கள் நினைவுகளை ஒருமுகப்படுத்தி அவரை நினைத்து அவர் எப்படி இருக்கிறார் என்று ஸ்தோத்திரித்து ஆராதனை செய்யுங்கள். காரணம் அவர் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணும் தேவன்.

**சங் 22:3** இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

உங்கள் உணர்வுகளை சார்ந்திராமல் விசுவாசத்தோடு காத்திருங்கள். அவர் பிரசன்னத்தை அனுபவிப்பீர்கள். ஜெபமனிதர் ஹைட் என்பவர் 38 மணிநேரம் விடாமல் நேர் முழங்காலில் நின்று ஜெபிப்பவர். ஒரு நாள் ஒரு மனிதனோடு ஜெபிக்க அறைக்குள் சென்றார். அறையின் கதவை மூடிவிட்டு 'ஒ தேவனே', என்ற ஒரு வார்த்தை மாத்திரம் ஜெபத்தில் சொன்னாராம், பின்பு கொஞ்ச நேரம் அமைதியாய் காத்திருந்தார். கொஞ்ச நேரத்தில் தேவ பிரசன்னம் அந்த அறை முழுவதையும் நிரப்பிற்று. அவரோடு ஜெபிக்கச் சென்றவர் தேவ பிரசன்னத்தை தன் வாழ்வில் உணர்ந்து, சந்தோஷத்தினால் நிறைந்து, அழ ஆரம்பித்து விட்டார். இங்கே இந்த தேவமனிதன் அதிகமான வார்த்தைகளை ஜெபத்தில் பயன்படுத்தவில்லை தேவ பிரசன்னத்தை உணர்ந்தார்கள். ஜெபம் என்பது தேவ பிரசன்னத்தை அனுபவிப்பதே.

## 1-2 ஜெபம் என்பது தேவனோடு ஐக்கியம் கொள்வதுதான்

இயேசு சொல்லிக் கொடுத்த மாதிரி ஜெபத்தில் பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, என்று ஆரம்பிக்கிறதைப் பார்க்கிறோம். ஜெபம் என்பது ஓர் அன்பான தகப்பனுக்கும், பிள்ளைக்கும் இருக்கும் ஐக்கியம் தான். அவசரம் அவசரமாக சில வார்த்தைகளை தேவனிடத்தில் சொல்லி விட்டு கடந்து போவது ஜெபம் அல்ல. அவரோடு நேரம் எடுத்து தொடர்பை ஏற்படுத்தி அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதும், அவர் நம்மோடு நிதானமாய் பேசி ஐக்கியம் கொள்வது தான் ஜெபமாகும்.

**வெளி 3:20** இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

நவீன காலத்தில் (Fast Food) அவசரம் அவசரமாக ஹோட்டலுக்கு வெளியே நின்று சாப்பிட்டு விட்டு போகும் கடைகள் பெருகி வருகின்றன. மனிதனுக்கு வேலைக்கு போகும் முன் சாப்பிடுவதற்குக் கூட நேரமில்லை. ஆனால், சிலர் ஹோட்டலில் உள்ளே சென்று அமர்ந்து, சாப்பிடும் பொருட்களை மெதுவாக கேட்டு வாங்கி, மேஜையில் உட்கார்ந்து பேசிக்கொண்டே சாப்பிடும் இடமும் இருக்கிறது. அதுபோல தேவனோடு அவசரமாய் பேசிவிட்டு ஓடிவிடாதபடி அவரோடு அமர்ந்து ஐக்கியம் கொள்ள நேரம் எடுக்க வேண்டும். ஜெபம் என்பது, ஒரு நண்பன் இன்னொரு நெருங்கிய நண்பரோடு பல மணிநேரம் பேசி ஐக்கியப்படுவது போன்றது, தேவன் நமக்கு நண்பரை போல இருக்க வேண்டும். ஜெபம் என்பது ஒரு நல்ல கணவன் தன் மனைவியோடு நேரம் எடுத்து பேசுவதும், மனைவி தன் கணவனோடு தன் உள்ளத்தில் உள்ளதையெல்லாம் சொல்லி நல்ல ஐக்கியமுள்ள குடும்பத்தை நடத்துவது போன்று, மணவாளனுக்கும், மணவாட்டிக்கும் உள்ள ஐக்கியம் தான் ஜெபம் என்பதாகும். அது இரண்டு பேர் அன்பினால் நிறைந்து கொண்டுள்ள உறவே.

இப்புஸ்தகத்தை வாசித்து கொண்டிருக்கும் நீங்கள் இப்படி நேரம் எடுத்து, தேவனோடு தரமுள்ள நேரம் கொடுத்து, ஐக்கியப்பட்டு ஜெபித்தது எப்போது? அப்படி ஜெபித்து பழகி இராவிட்டால் தேவனோடு பேசி, பழகி காத்திருக்க, ஐக்கியம் கொள்ள நேரம் எடுங்கள். உங்கள் வாழ்வில் அது பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். இப்போது நீங்கள் பற்பல வேலைகளில், ஊழியங்களில், வியாபாரங்களில் சிக்கி ஜெபிக்க நேரமில்லாமல் ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகளை மாத்திரம் ஜெபத்தில் சொல்லிவிட்டு மனதை ஒருமுகப்படுத்த நேரமில்லாமல் ஓடிக்கொண்டே பல நாட்களையும், மாதங்களையும் கழித்துவிட்டீர்கள். உங்கள் மனசாட்சியை திருப்திபடுத்த சில

நிமிடங்கள் ஜெபித்து விட்டு ஜெபத்தை முடித்துவிடுகிறீர்கள். இன்று நேரத்தை தள்ளிப் போடாமல், தேவனோடு நெடுநேரம் ஐக்கியம் கொள்ள தீர்மானம் எடுத்து ஜெபியுங்கள். என் வாழ்வில், தேவனோடு ஐக்கியம் கொள்ள சில சமயங்களில் பத்து நாட்கள், சில சமயங்களில் மூன்று நாட்கள், இன்னும் சில சமயங்களில் ஒரு நாள் முழுவதுமாக தேவனோடு ஐக்கியம் கொண்டு நாட்களை செலவழிப்பது வழக்கம். இந்த நாட்கள் என் வாழ்வில் பெருத்த ஆசீர்வாதங்களை கொண்டு வந்திருக்கிறது.

## 1-3 ஜெபம் என்றால் தேவ சித்தத்தை அறிந்து ஜெபிப்பது

இப்பொழுது நான் உங்களுக்கு எழுதும் ஜெபம் என்றால் என்ன என்கிற சத்தியம், மிகவும் முக்கியமான ஒன்று. சகரியா டேனி போமம் என்ற தேவமனுஷன் எங்கள் சபையில் வந்து இரண்டு முறை ஜெபக் கருத்தரங்கு நடத்தினார். அவைகளிலிருந்து ஜெபத்தைக் குறித்து நல்ல பாடங்களை கற்றுக் கொண்டோம். அவர் சொன்ன, எழுதிய சில கருத்துக்களை உங்களுக்கு முன் எடுத்து வைக்கிறேன். இதைக் கைக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு உண்மையான ஜெபமும் தேவனுடைய இருதயத்திலிருந்து ஆரம்பமாக வேண்டும். ஜெபம் என்பது முதலாவது தேவனுடைய தேவையை சந்திக்க தேவனால் உருவாக்கப்பட்டது. இரண்டாவதாகத்தான் மனுஷனுடைய தேவையை சந்திக்க தேவன் ஜெபத்தை ஏற்படுத்தினார். இயேசு கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்தில், பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, (1) உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக (2) உம்முடைய ராஜ்யம் வருவதாக (3) உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக என்று ஜெபிக்க இயேசு கற்பித்தார். முதலாவது தேவனுடைய தேவையை சந்திக்க ஜெபிக்கப்படுகிறது. இரண்டாவதாக எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை தாரும். எங்கள்

கடன்களை மன்னியும். சோதனையினின்றும், தீமையினின்றும் எங்களை இரட்சியும் என்று மனிதனுடைய தேவைகள் சந்திக்கபட ஜெபிக்கப்படுகிறது. வளர்ச்சி அடையாத விசுவாசிகளும், ஊழியர்களும் தங்கள் தேவைகளை மாத்திரம் ஜெபத்தில் சொல்லி ஜெபித்துப் பழகி விட்டார்கள். இன்றும் சபையில் 98% மக்கள் தங்கள் சொந்த தேவைகளை மாத்திரம் சொல்லி ஜெபிக்க கற்றுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான ஜெபம் என்பது தேவனுடைய இருதயத்திலிருக்கும் அவருடைய சித்தத்தை மற்றும் விருப்பத்தை அறிந்து கொள்ள, அவர் சமூகத்தில் தரித்திருந்து, அதை அறிந்து, அதை நிறைவேற்ற நேரம் எடுத்து ஜெபிப்பதுதான். ஜெபம், தேவனுடைய இருதயத்திலிருந்து, அவருடைய சித்தத்தை மனிதனுடைய இருதயத்திற்கு கொண்டு வருகிறதாயும் தேவனுடைய வாஞ்சையை மனிதனுடைய வாஞ்சையாக மாற்றிவிடுகிறதுமாய் இருக்கிறது. தேவனுடைய சித்தமாய் இருந்தது, மனிதனுடைய சித்தமாய் மாறின பின்பு, அது பாரத்தோடு தேவனுடைய சமூகத்தில் ஜெபிக்கப்படும் போது தேவனுடைய இருதயம் திருப்தி அடைகிறது. ஜெபிக்கிற மனிதனின் இருதயமும் திருப்தி அடையும். அந்த ஜெபத்திற்கு பதில் கிடைக்கிறது.

**1 யோவான் 5:14** நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.

முதிர்ந்த விசுவாசிகள் தேவனைப் பற்றியும், தேவனுடைய சித்தத்தையுமே, முதலாவது தங்கள் மனதில் வைத்திருப்பார்கள். தேவனுடைய வாஞ்சை என்ன என்பதை ஜெபத்தில் அறிய விரும்புவார்கள். இரண்டாவது மற்றவர்களின் தேவைகளை மனதில் வைத்து ஜெபிப்பார்கள். உங்கள் வளர்ச்சிநிலை என்ன? முதிர்ந்த விசுவாசிகள், தேவனை தங்களுக்கு வெளிப்படுத்தவும்,

அவர் சித்தத்தை வெளிப்படுத்தவும் அதிகநேரம் ஜெபத்தில் தரித்திருப்பார்கள். தேவனுக்கும் தேவை உண்டு என்பதை அநேகர் அறியாமல் இருக்கிறார்கள். தேவனுடைய தேவை என்ன? உதாரணம்:

**எசேக் 22:30** நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.

தேவனுடைய தேவை தேசம் அழியாதபடி ஜெபிக்கும் ஒரு மனிதன் தான். தேவனுடைய இன்னொரு தேவை என்ன?

**லூக்கா 10:2** அப்பொழுது அவர் அவர்களை நோக்கி அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

தேவனுடைய தேவை இங்கே என்ன? அறுப்புக்கு வேலையாட்கள் தேவை. இந்த தேவனுடைய தேவையை அறிந்து அவர் சித்தத்தின்படி ஜெபிப்பதே ஜெபம்.

**1-4 ஜெபம் என்றால் தேவனிடம் கேட்பதும், அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதும் ஆகும்.**

**லூக்கா 11:9-13** மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பானோ? மீனைக் கேட்டால்

மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானோ? அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானோ? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

முடிவில், ஜெபம் என்பது தேவராஜ்யத்திற்கும், தேவனுக்கும் அடுத்தவைகளை கேட்பது மாத்திரமல்ல, உங்களுக்கு தேவையான ஆகாரத்தையும் இன்று கேட்கலாம். கர்த்தர் உன் ஆவிக்குரிய தேவைகளை மாத்திரம் சந்திப்பவர் அல்ல. உன் சரீரப் பிரகாரமான தேவைகளையும் அற்புதமாய் ஜெபத்தில் சந்திப்பார்.

**மத் 6:33** முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

தேவனுக்கும், அவருடைய நீதிக்கும் நீங்கள் முதலாவது இடம் கொடுக்கும் போது உங்கள் தேவைகள் எல்லாம் சேர்த்து ஆண்டவர் தருவார். என் ஊழிய அனுபவத்தில் ஒருநாள் மதியம் சாப்பிடுவதற்குப் பணம் இல்லை. என்னைச் சந்திக்க வீட்டிற்கு ஒரு நண்பன் வந்து விட்டார். அவருக்கும் நான் சாப்பாடு வாங்கி கொடுக்க வேண்டும். நான் யாரிடமும் கடன் வாங்கப் போகவில்லை. யாருடைய வீட்டையும் சந்தித்து காணிக்கை வாங்கப் போகவில்லை என் சபையில் கதவைப் பூட்டி ஆண்டவரை நோக்கி ஜெபித்தேன். பல மணிநேரம் கழித்து இனிய சத்தம் கேட்டது. நான் உனக்கு மணியாடர் அனுப்பி இருக்கிறேன் என்ற அந்த சத்தம் கேட்டு, அரைமணி நேரம் கழித்ததும் தபால்காரர் வந்து எனக்கு மணியாடர் மூலம் பணம் கொடுத்து விட்டுப் போனார். 600 மைலுக்கு அப்பால் இருந்த என் நெருங்கிய நண்பர்

ஒருவரோடு மூன்று நாட்களுக்கு முன்பு ஆண்டவர் பேசி, அந்தப் பணத்தை எனக்கு அனுப்பி இருந்தார். தேவனுக்கு மகிமை உண்டாகட்டும். ஜெபம் என்பது தேவனுடைய சமூகத்தில் நாம் கேட்டுப் பெற்றுக் கொள்வதும் ஆகும்.

உங்கள் வாழ்வில் எப்போதாவது தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்ட அனுபவம் உண்டா? ஜெபிக்கிறீர்கள் ஆனால் பதில் இல்லாமலே ஜெபம் செய்து வருகிறீர்கள். இது ஓர் ஆபத்தான ஆவிக்குரிய நிலை. நான் ஒரு தேவமனிதனை அறிவேன். அவர் ஆண்டவரிடம் ஜெபிக்கும் ஒவ்வொரு ஜெபக்குறிப்பையும் ஒரு நோட்டில் எழுதுவார். எந்த தேதியில் ஜெபிக்க ஆரம்பித்தார், எந்த நாளில் அதற்கு பதில் வந்தது என்றும் எழுதிவைத்திருக்கிறார். அவர் சுமார் 30 ஆயிரம் ஜெபக்குறிப்புகளை எழுதி ஜெபித்திருக்கிறார். அதில் 25 ஆயிரம் ஜெபக்குறிப்புகளுக்கு பதில்கிடைத்த தகவல்களையும் வைத்திருக்கிறார். நீங்கள் ஜெபிக்கிறீர்கள் ஆனால் எதற்காய் ஜெபிக்கிறீர்கள் என்றே தெரியவில்லை.

ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் தேவன் நமது தேவன். ஜெபம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக எழுதியிருக்கிறேன். இன்னும் அநேக காரியங்கள் இதைக் குறித்து எழுதலாம் ஆனால் இந்தக் குறிப்புகளை ஒரு முறை ஞாபகப்படுத்தி இப்பொழுதே இதைப் பயிற்சி செய்யுங்கள்.

(1) ஜெபம் என்றால் தேவபிரசன்னத்தை அனுபவிப்பது.

(2) ஜெபம் என்றால் தேவனோடு ஐக்கியம் கொள்வது.

(3) ஜெபம் என்றால் தேவசித்தத்தையும், தேவனுடைய தேவையையும் அறிவது.

(4) ஜெபம் என்றால் கேட்பதும் பெற்றுக் கொள்வதும் ஆகும்.

# 2. ஜெபமின்மை என்றால் என்ன?

2-1 அநேக விசுவாசிகள் ஜெபமில்லாமை என்னும் பாவத்தில் பிடிக்கப்பட்டு பிசாசினால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் சிறிது நேரம் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு ஜெபிப்பதாக எண்ணுகிறார்கள். சிலர் ஆகாயத்தில் பேசுகிறார்கள். தேவனோடு தொடர்பு ஏற்படுத்துவதே இல்லை. உதாரணமாக, மின்சாரத்தின் மூலமாக தண்ணீர் சுட வைக்கும் பாத்திரம் (Water Heater) ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் வையர் (Wire) பிளக்கில் பொறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் சூடாகவில்லை காரணம் பிளக்கில் (Plug) சரியாக பொறுத்தப்படவில்லை பிளக் சரியாக மின்சாரத்துடன் இணைக்கப்படாவிட்டால் பாத்திரத்தில் உள்ள தண்ணீர் எத்தனை மணிநேரம் இருந்தாலும் அது சூடாகாது. காரணம், அது சரியாக மின்சாரத்துடன் இணைக்கப்படவில்லை. அதே போலத்தான், ஜெபத்தில் சரியாக தேவனோடு இணைக்கப்படாமல் சிலர் ஜெபிப்பதினால் அதில் பிரயோஜனமே இருப்பது இல்லை. இதுவே ஜெபமின்மை.

அதிக நேரம் மனிதர்களோடு பேசி நேரம் செலவழித்து சிறிது நேரம் மட்டும் தேவனோடு செலவழிப்பதும் ஜெபமின்மைதான். வேலை ஸ்தலத்திலும், வீட்டிலும் சும்மா இருக்கும் நேரங்களிலும், அதிகமான நேரம் மனிதர்களோடு விரையம் ஆகிறது. தற்காலத்தில் தொலைக்காட்சி (T.V) பார்ப்பதிலும், செய்தித்தாள்

வாசிப்பதிலும், போன் பேசுவதிலும், வீட்டிற்குள் வரும் விருந்தாளிகள், நண்பர்கள் மூலமாகவும், இசை, பாடல்கள் கேட்பது போன்ற காரியங்களிலும் நேரம் வீணாக்கப்படுகிறது. தேவனுக்கு முதலிடம் கொடுப்பது மற்றும் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு பதிலாக, மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. டேவிட்யாங்கிசோ என்பவர் கொரியாவிலுள்ள உலகத்திலேயே மிகப்பெரிய சபையின் போதகர். அவர் ஒருநாள் ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் தினமும் மூன்று மணி நேரம் காலை தனது அலுவலகம் சென்று ஜெபிப்பார். தன் காரியதரிசியிடம் (Secretary) தன்னை யாரும் ஜெபத்தில் இருக்கும் போது தொந்தரவு செய்யக்கூடாது என்று கண்டிப்பாய் கட்டளையிட்டு இருந்தார். ஒரு நாள் அவர் ஜெபத்தில் இருக்கும்போது அந்நாட்டு ஜனாதிபதி அவரோடு அவசரமாக தொடர்பு கொள்ள வேண்டியது இருந்தது. அவர் போன் மூலம் தொடர்பு கொண்டார். காரியதரிசி (Secretary) ஜனாதிபதியிடம், அவரை இப்பொழுது தொந்தரவு செய்ய முடியாது என்றுச் சொல்லி விட்டார். டேவிட்யாங்கிசோ இதை சொல்லும்போது தான் ஜனாதிபதிக்கெல்லாம் மேலான ஜனாதிபதியோடு பேசுவதுதான் முக்கியம் என்று தன் தேவனோடு செய்யும் ஜெபத்தை நிறுத்தவில்லை. ஜெபமின்மை என்பது தேவனுக்கு முதலிடம்

கொடாமலும், முக்கியத்துவம் கொடாமலும் மனிதனுக்கும், உலக காரியங்களுக்கும், முக்கியத்துவம் கொடுப்பதே ஆகும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் என்ன நிலையில் இருக்கிறீர்கள்? உங்களை ஜெபமின்மை என்னும் பாவம் பிடித்திருக்கிறதா?

ஒரு முறை நான் ஜெபிப்பதற்காக சில நாட்களை குறித்து வைத்திருந்தேன். அதே நாட்களில் அமெரிக்கா வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள, போய்வர டிக்கட்டுகள், எடுத்து, ஒரு நட்சத்திர ஹோட்டலில் வசதியாய் சில நாட்கள் தங்கவும், மற்றும் சில கூட்டங்களில் பேசவும் நான் கண்டிப்பாய் வரவேண்டும் என்று என் நெருங்கிய நண்பர் சொன்னார். நான் ஆண்டவரிடம் ஜெபித்தேன். ஆண்டவர் நீ எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறாய் என்று கேட்டார். நான் உடனே அமெரிக்கப் பயணத்தை நிறுத்திவிட்டேன். கர்த்தரோடு பத்து நாட்கள் செலவழிக்க தீர்மானித்து அவரோடு தரித்திருந்தேன். அந்நாட்கள் எனக்கு மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது. அடுத்த ஆண்டு அந்த நண்பர் மீண்டும் என்னை அழைத்தார். சில கூட்டங்களுக்குப் போனேன். சுமார் 30 ஆயிரம் பேர் 156 தேசங்களில் இருந்து வந்தவர்களுக்கு செய்தி கொடுக்க கிருபை கிடைத்தது. அதற்கு முந்தின வருடம் நான் தேவனுக்கு முதலிடம் கொடுத்தபடியால், பின்பு, தேவன் ஆசீர்வதித்ததைக் கண்டேன். மனிதர்களைவிடவும், ஊழியத்தைவிடவும் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்.

> ஜெபமின்மை என்பது தேவனுக்கு முதலிடம் கொடாமலும், முக்கியத்துவம் கொடாமலும் மனிதனுக்கும், உலக காரியங்களுக்கும், முக்கியத்துவம் கொடுப்பதே ஆகும்.

2-2 ஜெபமின்மை என்பது, ஜெபத்தைக் குறித்து சிந்திப்பது, பேசுவது, அதைக்குறித்து புஸ்தகம் வாசிப்பது, ஜெபத்தைக் குறித்து பிரசங்கம் செய்வது, புஸ்தகம் எழுதுவது, ஜெபத்தைக்

குறித்து கற்றுக் கொடுப்பது, ஜெபிக்க வாஞ்சிப்பது, ஜெபநேரத்தைக் குறித்து வைப்பது, ஜெபக்கருத்தரங்குக்கு போவது, ஜெபக்கூட்டங்களுக்கு போவது, ஆனால் ஜெபிப்பது இல்லை.

இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் பங்கெடுக்கும்போது ஜெபிக்க வாஞ்சை வரும். மகிழ்ச்சியாய் இருக்கும். ஜெபத்தில் ஒரு மாற்றம் வருவதுபோல உணர்விருக்கும். ஒன்றிரண்டு நாட்கள் மாற்றம் வந்தது போல் இருக்கும். ஆனால் ஜெபிப்பது இல்லை. ஜெபம் என்பது ஓர் கடினமான வேலை. கடினமான வேலை என்பது, அர்ப்பணிப்போடு செய்து, நடத்த வேண்டிய வேலைக்கு தன் ஆவி, ஆத்துமா, சரீரம் மற்றும் தன் முழு பெலத்தையும் பயன்படுத்தி குறிப்பிட்ட நேரத்தில் சரியானபடி போட்ட திட்டத்தின்படியே செய்து முடிப்பதே ஆகும். இயேசுகிறிஸ்து ஜெபித்தபோது அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளியாய் வந்தது. ஒரு கடின வேலை செய்யும்போது வேர்வை வரும். சோம்பேறியினால் ஜெபிக்கவே முடியாது.

**நீதி 24:30-34** சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது, நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது. அதைக் கண்டு சிந்தனை பண்ணினேன், அதை நோக்கிப் புத்தியடைந்தேன். இன்னுங்கொஞ்சம் உறங்கட்டும் இன்னுங்கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலும் வரும்.

சோம்பேறியாய் நீ இருந்தால் உன் ஜெபவாழ்வு முள்ளுக்காடாய், சுவர்கள் இடிக்கப்பட்டதாய், தரித்திரம் நிறைந்ததாயும் இருக்கும். இன்னும் கொஞ்சம் தூங்கட்டும்,

இன்னும் கொஞ்சம் உறங்கட்டும் என்று சொல்லி ஜெபமின்மை என்னும் பாவத்தில் விழுந்திருக்கிறீர்களா?

2-3 ஜெபமின்மை என்பது, நாள் முழுவதும் கடினமான வேலைகள் செய்துவிட்டு, நன்றாய் சாப்பிட்டு விட்டு, கட்டில் பக்கமாய் சாய்ந்து முழங்கால்படியிட்டு கொஞ்சம் தூங்குவது, கொஞ்ச நேரத்தில் விழித்து சில வார்த்தைகளை முனங்கிவிட்டு படுத்து விடுவது ஆகும்.

ஜெபம் செய்வதற்கு ஆயத்தம் தேவை. விழிப்புத் தேவை. சில காரியங்களை தியாகம் செய்ய வேண்டும். கனநித்திரையின் ஆவி சிலரைப்பிடித்து ஜெபிக்க செல்லும் போதெல்லாம் தூக்கஆவி வந்து அலைக்கழித்து, ஜெபமில்லாத வாழ்க்கையை கொண்டு வருகிறது. ஜெபிக்க சரியான ஒழுங்கு முறைகள் தேவை. கடினவேலைக்குப் பின், சரீரம் களைத்துபோன பின்பு, தூக்கம் வரும் சமயம், ஜெபிக்க போகிறேன் என்று மனசாட்சியை திருப்திபடுத்த ஜெபிக்க செல்லுவதால், ஜெபமின்மை என்னும் வலையில் சிக்கித் தவிக்கிறோம்.

2-4 ஜெபமின்மை என்பது, ஜெப நேரத்தில் மனதை ஜெபத்தில் செலுத்தாமல் அலைய விடுவதாகும். ஜெபிக்கும்போது ஜெபத்தில் கவனம் செலுத்துவதில்லை. சிலர் பலமணிநேரம்

ஜெபிக்கிறேன் என்று சொல்லுவார்கள் அந்த பலமணி நேரத்தில் மனம் அடிக்கடி பிரயாணம் செய்து வேறு எங்கேயோ போய்விடும். ஜெபத்தில் கவனம் இல்லாததால், ஜெபமின்மை என்னும் தீய காரியத்தில் சிக்கிக்கொள்ளுகிறார்கள்.

ஒரு நாள், நான் ஒரு மணிநேரம் ஜெபிக்கும் போது எத்தனை முறை என் மனம் வேறுகாரியங்களுக்கு போகிறது என்பதை குறித்து வைத்தேன். சுமார் 18 முறை என் கவனம் சிதறிப்போனதை கண்டு வியந்துவிட்டேன். சில முக்கியமான வேலைகளைச் செய்ய வேண்டியது இருக்கும்போது ஜெபம்பண்ணச் சொன்னால் அந்த வேலைகளே மனதில் வரும். ஜெபிக்கும் போதுதான் ஊழியம் செய்யக் கூடிய பெரிய திட்டங்களை சாத்தான் கொண்டு வருவான். தேவனை கருத்தில் கொண்டு ஒருமனதோடு ஜெபிக்க வேண்டும் என்று வேதத்தில் அடிக்கடி வாசிக்கிறோம்.

**அப் 2:1** பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

**அப் 1:14** அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங் கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

**அப் 4:24** அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு கர்த்தாவே நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்.

ஆதி திருச்சபையில் இருந்த விசுவாசிகள் தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ததற்கான காரணம், அவர்கள் ஒரேமனமாய் தேவனை நோக்கி ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு ஒருமனம் தேவை.

2-5 ஜெபமின்மை என்பது ஜெபக்கூட்டங்கள் நடத்துவது, அந்த ஜெபக் கூட்டங்களில் ஜெபிக்காமலே கூட்டங்களை முடித்து விடுவது, கூட்டத்திற்கு ஜெபிக்க வரும் மக்களும் வாய்திறந்து ஜெபிக்காமலேயே அமைதியாய் இருப்பது.

சில நேரங்களில் முழுஇரவு ஜெபம் நடப்பதை கவனித்திருக்கிறேன். ஒருமணி நேரம் பாடல் ஆராதனையும், தொடர்ந்து வெளியூரிலிருந்து வரும் விசேஷித்த பாடகர்களின் பாடல்களும் நடைபெறும். இடையில் அதிகநேரம் வாத்திய கருவிகளை, இசைக்கும் வல்லுனர்கள் இசை திறமையை காண்பிப்பார்கள். பின்பு இரண்டு பிரசங்கங்கள் அதுவும் நீண்ட நேரமாக செய்யப்படுகிறது. இவைகள் மக்களுக்கு அதிக களைப்பையும், தூக்கத்தையும் கொண்டு வரும். பின்பு அதிகமான நேரம் அறிவிப்புகள் கொடுக்கப்படுகிறது. பட்டணத்தில் எங்கு விசேஷ கூட்டங்கள் நடக்கிறது என்பது பற்றிய அறிவிப்பு, பின்பு காணிக்கை எடுக்கும் முன் காணிக்கை பற்றி ஒருவர் பேசுவது, காணிக்கை எடுக்கும்போது இரண்டு விசேஷித்த பாட்டுகள் பாடப்படுகின்றன. பின்பு டீ குடிக்க சிறிது இடைவேளை. பின்பு புஸ்தகம், கேசட் வியாபாரம். ஜெபிக்க பாரமுள்ள மக்கள் வராமல், தங்கள் தேவைகள் சந்திக்கப்பட, ஊழியர் தங்கள் தலையில் கை வைத்து ஜெபிப்பாரா என்று காத்திருக்கும் மக்கள் கூட்டம் தான் காணப்படுகிறது. ஜெபம் நடத்துகிறவர்கள் ஏதோ ஒன்று அல்லது இரண்டு ஜெபக்குறிப்புகளை மக்களுக்கு புரியாத வகையில் சொல்லி ஜெபம் முடிவடையும். ஆசீர்வாத ஜெபம் அந்தோ பரிதாபம், ஜெபமில்லாத ஜெபக் கூட்டங்களே காணப்படுகின்றன. இப்படி 'ஜெபிக்காத ஜெபக் கூட்டங்கள்' ஏராளம். உண்மையாய் ஜெபத்திற்காய் நடத்தும் ஜெபக் கூட்டங்களுக்கு ஆட்கள் வருவதில்லை 100க்கு 99.9 சதவீதம் சபைகள் ஜெபமின்மை என்ற பாவத்தினால் இழுக்கப்பட்டு, எழுப்புதல் இல்லாமல்

காணப்படுகிறன. அநேக சபைகளில் பலவித நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. சரியான ஜெபம் நடத்தப்படுகிறதில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல சபைகளில் பிரசங்கம் செய்திருக்கிறேன். என்னிடம் பலர் அமெரிக்க சபைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேள்வி கேட்பார்கள். நான் அவர்களிடம் சொல்வது, சபைகளில் மக்களை கவரும் நல்ல நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள். சபையில் ஜெபிக்க ஆட்கள் இல்லை. ஜெபிக்கும் கூட்டங்களுக்கு தள்ளாடி நடக்க முடியாத வயதான பெண்களே ஜெபிக்க வருகிறார்கள் என்று சொல்லுவேன்.

ஜெபமின்மை என்பது விக்கிரக ஆராதனையைவிட, விபச்சாரத்தைவிட, கொலை கொள்ளையைவிட, பில்லி-சூனியத்தை விட, கொடிய பாவத்தை விட பெரிய பாவம் என்பதை விசுவாசிகள் உணர வேண்டும். .

ஜெபமின்மை என்பது கர்த்தரோடு சேர்ந்து அவர்பக்கம் நிற்காமல் சாத்தானோடு கைகோர்த்து நின்று அவனுக்கு உதவி செய்வது.

ஜெபமின்மை என்பது தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றாமல் அதைத் தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்று எடுக்கும் தீர்மானமேயாகும்.

ஜெபமின்மை என்பது நமக்கு கிடைக்கும் தேவ சந்தோஷம், சமாதானம், சுகம், வல்லமை, தேவசித்தம் இவைகளை தடை செய்ய நமக்குள் காணப்படும் செயல்களே ஆகும்.

ஜெபமின்மை என்பது தலைவர்கள் கூடி ஒரு சிறு ஜெபம் செய்துவிட்டு பல நாட்கள் உட்கார்ந்து சபைகாரியங்களைக் குறித்து பேசி, பல தீர்மானங்களை எடுத்து சிறிய ஜெபத்தோடு முடிப்பதே. நவீன காலங்களில் காரியநிர்வாக குழு கூட்டங்களில் கூடி பேசியும் மாநாடுகளை கூட்டி விவாதம் நடத்துவதும், தேவசித்தம்

அறியாமல் கன்வென்ஷன் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி சாப்பிட்டு, வசதியாக தங்கி பரியாச வார்த்தைகளை பேசி ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் பேசி சண்டையிடுவதுமே ஜெபமின்மை.

தலைவர்கள் கூடி ஜெபிக்க வேண்டும். பத்தாண்டு அறுவடை திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டு மாநில தலைவர்கள், மண்டல தலைவர்கள் கூடி, மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தோம். போதகர்கள் கூடி ஒரு நாள் உபவாச ஜெபம் செய்தோம். மாநாடுகள் ஆசீர்வாதமாய் நடை பெற்றது. சபைகள் வளர்ந்து பெருகி தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஆயிரம் சபைகள் ஸ்தாபிக்க முடிந்தது. தேவனுக்கே மகிமை.

இதை வாசிக்கும் அருமை சகோதர சகோதரிகளே

1. ஜெபமின்மை என்கிற கொடிய பாவத்தில் சிக்கி இருக்கிறாயா?
2. ஜெபிக்கும்போது உன் மனது சிதறி சரியாய் ஜெபிக்க முடிய வில்லையா?
3. கடினமான வேலைகள், நல்ல சாப்பாடு, கட்டில் பக்கம் சாய்ந்து தூக்கமா?
4. ஜெபத்தை குறித்து வாசித்து, அதை சிந்தித்து, அதை வாஞ்சிக்கிறாய், ஆனால் ஜெபிக்க முடியவில்லையா?
5. மனிதர்களோடு பேசவும், டி.வி பார்க்கவும், செய்தித்தாள்களை வாசிக்கவும் அதிக நேரம் கொடுக்கிறாயா?
6. ஜெபக் கூட்டங்களுக்குப் போயும் ஜெபிக்க முடியவில்லையா?

ஜெபமின்மை என்கிற பாவத்தை விட்டுவிட ஒரு தீர்மானம் செய்து ஜெபிக்க இப்பொழுது ஒப்புக்கொடு. ஜெபஆவி உங்களை இன்று நிரப்பும்.

# 3. நீங்கள் ஜெபம் செய்ய முடியாதபடி உங்களுக்கு வரும் தடைகள்

3-0 ஒருமுறை சுமார் 500 பேர்கள் கூடி இருந்த ஜெபப்பங்காளர்கள் கூட்டத்தில் நீங்கள் சரியாய் ஜெபம் செய்ய முடியாமல் உங்களுக்கு வரும் தடைகள் என்ன என்று கேட்டேன். ஒவ்வொருவராய் எழும்பிச் சொல்ல ஆரம்பித்தார்கள். இன்னொரு நாட்டில் ஒரு முழு இரவு ஜெபத்திற்கு வந்த மக்களிடமும் இந்த கேள்வி கேட்கப்பட்டது அந்தக் கூட்டத்தில் சொன்ன பதில்கள் ஒரு புஸ்தகத்தில் வாசித்து, அதை ஒரு நோட்டில் எழுதி வைத்திருந்தேன். நான் என்ன பதில்களை எழுதி வைத்திருந்தேனோ அதே பதில்களைதான் என் சபையில் உள்ள ஜெபப்பங்காளர்களும் சொன்னார்கள். எல்லா இடங்களிலுள்ள விசுவாசிகளை சாத்தான் ஒரேவித காரணங்களால் ஜெபிக்க தடை செய்கிறான் என்பதை புரிந்து கொண்டேன். விசுவாசிகள் சொன்ன தடைகளை குறித்து வாசிப்போம்.

### 3-1 ஜெப நேரத்தை தள்ளிப் போடுவது

ஜெபிக்க வேண்டும் என்று ஒரு நேரத்தை குறிப்பதும் அல்லது நினைப்பதும் பின்பு அவைகளை தள்ளிப்போடுவதும், சர்வவல்ல தேவனிடம் நான் ஜெபிக்க வருகிறேன் என்று சொல்லியும், அதை அப்படிச் செய்யாமல் தள்ளிப் போட்டு விடுவதும் தேவனை அவமதிப்பதாகும்.

### 3-2 ஆட்கள் தடை

ஜெபிக்கும் நேரத்தில் தீடீர் என்று விருந்தினர் வந்து விடுவதும், போன் வந்து விடுவதும், வீட்டில் உள்ள பிள்ளைகளை கணவன் அல்லது மனைவி தொந்தரவு செய்வதும், உங்கள் ஜெப நேரத்தை தடை செய்வதே சாத்தானின் முக்கிய வேலை. இயேசுவிடம் பேதுருவின் மூலம் சாத்தான் வந்தது போல யார் மூலமாவது சாத்தான் நீங்கள் ஜெபிக்கும் நேரத்தை தடை செய்வான். மனிதர்களுக்கு அல்ல கர்த்தருக்கே முதலிடம் கொடுப்பீர்களாக.

### 3-3 ஒழுங்கு முறைகள் இல்லை

ஜெபிக்க ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரம் கொடுக்காமல் ஆட்கள் தடை செய்யாத ஒரு நல்ல இடம் தெரிந்தெடாமல் இருப்பது ஆகும். வீட்டில் தூங்க நேரம் இக்கிறது, அதுபோல சாப்பிடவும் நேரம் இருக்கிறது மற்றும் டி.வி நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கும், வேலைக்கு சரியான நேரத்திற்கு போவதற்கும் இதுபோக சமையல் செய்வதற்கும் குறிப்பிட்ட நேரமும் இடமும் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் மிகவும் அவசியமான தேவனோடு பேசும்படியாக குறிப்பிட்ட நேரமும், இடமும் நாம் ஒதுக்குகிறதில்லை. ஆகையால் ஜெபிக்க முடியவில்லை.

## 3-4 ஜெபிக்கும் நிலை

ஜெபிப்பதற்கு தூங்காமல் விழிப்போடு நன்றாய் ஜெபிக்கக் கூடிய நிலையிலிருந்து ஜெபித்தால், ஜெபிக்க முடியும். தூங்க கூடிய நிலையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து, உட்கார்ந்து கொள்ளுவதும், கட்டிலில் சாய்ந்து தலையை தலையணையில் வைத்து, படுத்துக் கொள்ளுவதும், ஜெபிப்பதாய் நினைத்துக் கொள்ளுவதும் ஜெபத்தில் தூங்குவதும்தான் அதிகமான தடையாக இருக்கிறது.

## 3-5 ஜெபிக்க வாஞ்சையில்லை, பாரமில்லை

ஜெபிக்க ஓர் அளவில்லாத வாஞ்சை, ஜெபபாரம் இருந்தால் தான் ஜெபிக்க முடியும். அதிகமாக மக்கள் பாரம்பரிய ஜெபம் செய்கிறவர்கள்தான். கடமைக்கென்று ஜெபிப்பது, ஓர் குறிப்பிட்ட காரியத்தில் பாரம் வாஞ்சை இருக்குமானால் நமக்கு தூக்கமே வராது. ஜெபத்தில் வாஞ்சை இல்லாத அல்லது பாரமில்லாத வாழ்வுதான் ஜெபத்திற்கு தடையாக இருக்கிறது.

## 3-6 சோம்பல்

சோம்பல் தூங்கி விழப்பண்ணும் நீதி 13:4 சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது, ஜாக்கிரதையுள்ள ஆத்துமாவோ புஷ்டியாகும் என்று வேதம் சொல்லுகிறது. நமக்குப் பல காரியங்களில் ஜாக்கிரதையும் சுறுசுறுப்பும் இருக்கிறது. ஆனால் ஜெபம் செய்வதற்கு சோம்பல் இருக்கிறது. இதுதான் ஜெபத்திற்கு பெரிய தடை.

## 3-7 சிறிது நேரம் ஜெபிப்பதும் பின்பு எழும்பி விடுவதும்

இது பிசாசின் ஓர் வஞ்சனை செயல். சிறிது நேரம் நன்றாய் ஜெபிப்பதும், திடீர் என்று ஜெபத்தை விட்டு அறியாமலே எழுந்துவிடுவதும் அல்லது அந்த நேரத்தில் வேறு வேலை

ஏதாவது மனதில் கொண்டு வருவதும், ஜெபிப்பதற்கு தடையாக இருக்கிறது.

## 3-8 ஜெபிக்கும் நேரத்தில் என்ன ஜெபிக்க வேண்டும் என்று தெரியாமல் ஜெபிப்பது

ஜெபிக்கும் நேரத்தில் மனதில் ஜெபிக்க ஒரு காரியமும் வராமல் சில வேலைகளில் ஸ்தம்பித்து போகிறதும் தடையாகிறது. மேலும் ஜெபஆவி இல்லாமலேயே ஜெபம் ஆரம்பிக்க முடியாமலும் ஜெபிப்பதை முடிக்காமலேயே விட்டு விடுவதும் ஜெபத்திற்கு தடையாகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் ஜெபத்தை விடாமல் சற்றுப் போராடி கர்த்தரை துதித்து, பாடல்பாடி, அல்லது வேதவசனங்களை வாசித்து, கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து ஜெப ஆவிக்குள் வந்துவிடுவது நல்லது இல்லாவிட்டால் இதுவும் ஜெபத்திற்கு தடையாக இருக்கிறது.

## 3-9 சோர்வு

ஜெபித்து என்ன பலன் கிடைத்து விட்டது ஜெபிக்க ஜெபிக்க சோதனைதான் வருகிறது என்று எண்ணுவதும், ஜெபிக்க முடியாமலேயே ஆக்கிவிடுகிறது. **மனிதர்களால் பேசின வார்த்தைகள், வீட்டில் உள்ளவர்கள் செய்கிற காரியங்கள், ஊழியர்களின் தவறான வாழ்க்கை இவைகள் சோர்வை கொண்டு வந்து ஜெபிக்க தடை செய்கின்றன. அடிக்கடி சரீரத்தில் உண்டாகும் வியாதிகள், களைப்புகள் ஜெபிக்க விடாமல் சோர்வை கொண்டுவந்து விடுகிறது. வீட்டிற்குள் கணவன் மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், மாமியார் மருமகள் நாத்தனார் பிரச்சனைகள் சோர்வை கொண்டு வந்து ஜெபிக்க விடுகிறதில்லை.**

**1 பேதுரு 3:7** **இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக**

வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.

ஜெபத்திற்கு தடை வராதபடி ஒருவரை ஒருவர் கனப்படுத்த வேண்டும் என்று பார்க்கிறோம்.

## 3-10 குடும்ப பொறுப்புகள் அதிக வேலைகள்

விலைவாசி உயர்வுபற்றிய கவலை, பெரிதான குடும்பம், கணவன், மனைவி இருவரும் வேலைக்கு செல்வதும், பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதும், உயர் படிப்புகளுக்கு அனுப்புவதும், நவீன கால வீட்டுப் பொருட்களைச் சுத்தம் செய்து வைப்பதும், அடிக்கடி நண்பர் வீடுகளுக்குச் செல்லுவதும், வெளி இடங்களுக்குச் செல்வதும், உல்லாச பயணங்களை மேற்கொள்வதும், பொழுது போக்குகளில் ஈடுபடுவதும் ஆகிய இவைகளெல்லாம் ஓரளவிற்கு ஜெபத்தை தடை செய்கின்றவையாகவே காணப்படுகின்றன.

சில நாட்கள் தனித்து ஜெபிக்க ஒரு இடத்தில் காத்திருக்கும் போது, கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டு ஜெபித்துக் கொண்டு இருந்தேன். நான் அவரோடு பேசவும், அவர் என்னோடு பேசவும் நல்ல ஐக்கிய நேரமாய் இருந்தது. அப்பொழுது ஜெபத்திற்குரிய தடைகளைக் குறித்துப் பேசும்போது அவர் சில தடைகளைக் குறித்து பேசிய காரியங்களை கவனிப்போம்.

> **நன்றாய் ஜெபிக்க வேண்டுமானால், நாம் சுயசித்தம் செய்கிறவர்களாக இருக்கக் கூடாது. எவ்வளவுக்கு அதிகம் நம் சுய சித்தத்தை உடைத்து, அதை சிலுவையில் அறைகிறோமோ அவ்வளவாய் நாம் ஜெபிக்க முடியும்.**

## 3-10-1 சுயசித்தம் உடைக்கப்பட வேண்டும்

நன்றாய் ஜெபிக்க வேண்டுமானால், நாம் சுயசித்தம் செய்கிறவர்களாக இருக்கக் கூடாது. எவ்வளவுக்கு அதிகம் நம் சுய சித்தத்தை உடைத்து, அதை சிலுவையில் அறைகிறோமோ

அவ்வளவாய் நாம் ஜெபிக்க முடியும். நாம் சுயசித்தம் செய்யும்போது அதிக தூக்கத்திற்கும், சாப்பாட்டிற்கும், இச்சைகளை நிறைவேற்றவும் நாம் நம் கண்முன்னால் காணும் மனிதர்களோடு பேசுவதற்கும் அதிகமாய் விரும்புகிறோம். அவைகளை விட்டு விட்டு தேவசித்தத்தைச் செய்ய அவரோடு நேரம் செலவழிக்க வேண்டும்.

**மத் 26:39** சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.

இயேசுகிறிஸ்து, என் சித்தம் அல்ல உம் சித்தமே ஆகக்கடவது என்று தன் ஜீவனைக் கொடுக்க துணிந்து நின்றார். அதேபோல் நம் ஜீவனை கொடுக்க வேண்டியது இருந்தாலும், தேவசித்தம் செய்ய அர்ப்பணிப்புத் தேவை. இப்படிப்பட்ட மக்களே தடைகளை அகற்றி ஜெபிக்க முடியும். சோதனை நேரத்தில் தேவனிடத்தில் கிருபைக்காய் கேட்டு தேவசித்தம் செய்ய பெலன் பெற வேண்டும் என்று பேசினார்.

### 3-10-2 அவிசுவாசம்தான் ஜெபத்திற்கு அதிக தடையாய் இருக்கிறது.

**எபி 11:6** விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

**மத் 9:29** அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது, என்றார்.

அவிசுவாசம்தான் ஜெபத்திற்கு எதிரியாக இருக்கிறது. பல நாட்கள் ஜெபிக்க முடியாமல் போயிருக்கலாம், ஜெபிக்க பல தீர்மானங்கள் எடுத்தும் தோல்வியடைந்திருக்கலாம், ஜெபிக்க முடியும் என்று விசுவாசிக்க வேண்டும். உங்கள் ஜெபத்திற்கு பதில் தருவார் என்றும் விசுவாசிக்க வேண்டும். நாம் கடிதம் எழுதி விலாசம் எழுதி தபால் பெட்டியில் நம்பிக்கையோடு போடுகிறோம். அது அந்த விலாசத்திற்கு எத்தனையோ மைலுக்கு அப்பால் உள்ள இடத்திற்கு போய் சேர்ந்துவிடும் என்று விசுவாசிக்கிறோம். நாம் கர்த்தரிடம் ஜெபிக்கும் ஜெபத்திற்கு, அவரிடமிருந்து பதில் வரும் என்று விசுவாசித்து பதில் பெற வேண்டும். ஜெபத்திற்கு விசவாசத்தினால் வரும் பதிலே நம்மை ஜெபிக்க ஊக்கப்படுத்தும்.

3-10-3 மூன்றாவதாக நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒழுங்குபடுத்து என்று தேவன் பேசினார். ஒழுங்காக ஜெபிக்க நேரம் மிகவும் அவசியம். காலத்தை ஆதாயப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வருடமும் நான் டையரி ஒன்றை வாங்கி முதலாவது என் ஜெப நாட்களை குறித்து வைத்து விடுவேன். ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் பத்து நாட்களாவது உபவாசித்து, ஜெபிக்க நேரம் ஒதுக்கி அதை மாற்றி விடாதபடி பாதுகாத்துக் கொள்ளுவேன். காரணம் அதிகமான ஊழிய அழைப்புகள் வருவதும், சபை விசுவாசிகள் பலகாரியங்களுக்காக என்னை தேடுவதும் உண்டு. ஆகவே ஜெப நாட்களை ஒதுக்காவிட்டால் பலமணி நேரங்கள் இந்தவிதமான வேலைகளில் கழிந்துவிடும். ஜெபிக்கவே முடியாமல் போய்விடும். நம்முடைய ஜெப நேரங்களை வீணாக்கும் போன், தொலைக்காட்சி பெட்டி, பத்திரிக்கைகள், மனித்ர்கள் இவைகளை கவனித்து விலக்கி விட்டு ஜெபிக்க நேரம் எடுக்க வேண்டும். தேவன் நமக்கு கொடுத்த நேரத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோமோ அப்படித்தான் நம் ஆவிக்குரிய வாழ்வின் முன்னேற்றமும் இருக்கும். நேரம் ஒவ்வொரு வினாடியாய் கடந்து

போகிறபடியால் நேரம் போவதே தெரியாது. ஒரு மனிதன் ஒரு மணி நேரத்திற்கு 15 நிமிடம் வீணாக்கினால் அவன் 100 வருடம் வாழ்ந்தால் தன் வாழ்நாளில் 25 வருடம் வீணாக்கி விடுகிறான். ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் தூங்கி 75 வருடம் உயிரோடு வாழ்ந்தால் 25 வருடம் தூங்கி கழிக்கிறான். நேரத்தை வீணாக்கிவிட்டால் திரும்ப அதைப் பெற முடியாது. தூக்க நேரங்களை குறைத்து, ஜெபநேரத்தை அதிகரிக்க வேண்டும். இயேசுவும் ஜெபத்திற்கே முதலிடம் கொடுத்தார். இயேசுவுக்கு இருந்த முதல் தரமான நல்ல நேரத்தை ஜெபத்திற்கு கொடுத்தார்.

**மாற்கு 1:35** அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்திரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்.

3-10-4 இயேசுவோடு அதிக அன்பாய் இருக்க வேண்டும். இயேசுவில் அன்பாயிராவிட்டால் ஜெபத்திற்கு தடை வரும். இயேசுவில் அன்பாய் இருந்தால் கீழ்படிவோம், நமக்கு பிரியமாய் நடக்கமாட்டோம். நமக்கு பிரியமாய் நடக்கும்படி சோதனை வரும்போது அதை வெறுத்து பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு ஒப்புக் கொடுப்போம்.

3-10-5 தேவையில்லாத வேலைகள் அல்லது ஊழியங்களில் ஈடுபட்டு நேரத்தை வீணாக்குவதால் ஜெபத்திற்கு தடைகள் வருகிறது. இயேசுகிறிஸ்து ஜெபிக்கப் போக வேண்டிய இடத்திற்கு போனார்.

**லூக் 2:49** அவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்.

**யோவான் 9:4** பகற்காலமிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

**மத் 16:21** இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

பிதாவிடம் குமாரன் காண்கிறது எதுவோ அதையன்றி ஒன்றையும் தானாக செய்யமாட்டார். இயேசுவிடம் ஒருவன் வந்து தன் நிலத்தின் பங்கை பிரித்துக் கொடுக்கும்படி கேட்ட பொழுது அவர் அதில் தலையிடவில்லை. அவர் பிதாவின் சமூகத்திற்கே நேரம் கொடுத்தார்.

## 3-10-6 வீணான அலுவல்களைத் தவிர்த்தார்

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருந்தால் ஜெபிக்க தடை வராது. வீணான கவலைகள், பாரங்கள் எப்போதும் ஜெபத்திற்கு தடை உண்டாக்கும். பிசாசு நம்மைப் பற்றி தவறாய் குற்றப்படுத்தி வேதனைப்படுத்துவான். அவைகளை அப்புறப்படுத்தி கர்த்தரோடு சந்தோஷமாய் இருக்கும் போதுதான் நாம் நன்றாய் ஜெபிக்க முடியும். இப்படி இந்த காரியங்களை என்னோடு பேசி என்னை உற்சாகப்படுத்தினார்.

## 3-10-7 அக்கிரம சிந்தை என்னும் பாவம் ஜெபத்திற்கு தடை

**ஏசா 59:1,2** இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிக்கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

**சங் 66:18** என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

பாவத்தையும், அக்கிரம சிந்தையையும் உள்ளத்தை விட்டு அகற்றி இருக்க வேண்டும். பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லை. பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். பின்புதான் தேவனுடைய முகம் நமக்கு மஃறைக்கபடாது ஜெபம் தடையில்லாமல் வரும்.

## இந்தப் பகுதியை வாசித்த பின்பு நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டியவைகள்

1. ஜெபநேரத்தை தள்ளிப் போடுகின்றீர்களா?
2. உங்கள் ஜெப நேரத்தை தடை செய்யும் காரியங்கள் யாவை?
3. எளிதாக தூக்கம் வரக்கூடிய நிலையில் கட்டிலில் சாய்ந்து ஜெபிக்கின்றீர்களா?
4. ஜெபிக்க வாஞ்சையும் பாரமும் இல்லையா?
5. சோம்பல், சோர்வு, அதிக வேலைகள் ஆகியவை ஜெபத்தை தடை செய்கின்றதா?
6. சுயசித்தம், அவிசுவாசம், நேரத்தை ஒழுங்குபடுத்தாமல் இருப்பதும், தேவனை நேசிக்காமல் இருப்பதும் ஆகியவைகளால் ஜெபம் தடை செய்யப்படுகிறதா?
7. அக்கிரம சிந்தை, பாவம் ஆகியவை ஜெபத்திற்கு தடையாய் இருக்கிறதா?

# 4. ஒழுங்காக ஜெபிப்பது எப்படி?

4-0 ஒழுங்காக ஜெபிக்க ஓர் திட்டம் இருக்க வேண்டும். ஒரு விளையாட்டை விளையாடி ஜெயிக்க வேண்டுமானால் அதற்கு ஜெயிக்க கூடிய திட்டத்தை அந்த விளையாட்டு அணியின் தலைவன் வைத்திருப்பான். அதன்படி விளையாட்டு வீரர்கள் விளையாடினால்தான் ஜெயம் பெற முடியும். அதேப்போல ஒழுங்காக ஜெபித்தால்தான் ஜெயம் ,பெற்ற ஜெப ஜீவியம் செய்ய முடியும். சில விசுவாசிகளுக்கு ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் கூட ஒழுங்காக ஜெபிக்கத் தெரியாது. சிறிது நேர ஜெபத்திற்கு பின் என்ன ஜெபிக்க வேண்டும் என்று தெரியாமல் ஜெபத்தை நிறுத்தி விடுவார்கள். தினந்தோறும் ஒழுங்காக ஜெபிக்க ஒரு திட்டம் வைத்திருக்க வேண்டும். பல மாதிரியான ஜெப திட்டங்களை குறித்து கீழே வாசிக்கப் போகிறோம். நீங்களே உங்களுக்கு வசதியான ஜெப திட்டங்களை வகுத்து கொள்ளுங்கள்.

### 4-1 ஜெப ஆயத்த நேரம்

ஜெபிப்பதற்கு உங்கள் சரீரத்தையும், மனதையும்,

உணர்வுகளையும், உங்கள் ஆத்துமாவையும் ஆவிக்குரிய நிலைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். சரீரப்பிரகாரமான ஆயத்தம் செய்வது எளிது. ஜெபிக்க ஒரு நல்ல இடம், அதாவது பிறர் தொந்தரவு செய்யாத நிலையில் உள்ள ஒரு இடத்தை தெரிந்துக்கொள்ள வேண்டும். மேலும் ஒரு நோட்டு, பேனா, பென்சில், பாட்டு புஸ்தகம், வேதாகமம் ஆகிய எல்லாவற்றையும் முன்கூட்டியே ஆயத்தம் செய்ய வேண்டும். இதை ஆயத்தம் செய்த பின்பு, கர்த்தர் உங்களோடு ஆவியில்பேச கீழ்படியுங்கள், இருதயத்தையும், உங்கள் மனதையும், ஆவியையும் ஆயத்தம் செய்ய வேண்டும். உங்கள் முழு கவனத்தையும் கர்த்தருக்கு நேராக்கி, அலையும் எண்ணங்களை ஓர் நிலைக்கு கொண்டு வந்து தேவனோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

## 4-2 பாவ அறிக்கை செய்யும் நேரம்

**1 யோவான் 1:8,9** நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் நாம் பாவ உலகில் வாழும்போது தெரிந்தோ தெரியாமலோ பாவம் நம்மில் வருகிறது. சில சுபாவங்கள் நம் இருதயத்தின் ஆழத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். அது நமக்கே தெரியாது. ஒருமுறை நான் ஏழுநாட்கள் உபவாசம் பண்ணி ஜெபித்தேன். ஒரு நாளைக்கு 17 மணி நேரம் ஜெபிப்பேன், உட்காரமாட்டேன், படுக்கமாட்டேன் தூக்கத்தை என் கண்களுக்கு வரவிடமாட்டேன். தேவன் என்னோடு பேச வேண்டும் என்று விடாப்பிடியாய் ஜெபித்தேன். ஏழு நாட்களுக்கு பின்பு ஒரு ஊழியத்திற்கு செல்ல வேண்டியது இருந்தது என்னோடு

இன்னொரு ஆள் ஊழியத்திற்கு வருவேன் என்று சொன்னார். அந்த ஆளை எனக்குப் பிடிக்காது. அவரிடத்தில் நான் அன்பாக இல்லை. ஆவியானவர் என்னோடு பேசினார் நீ ஏழுநாட்கள் என்னோடு விடாமல் ஜெபித்தும் ஒரு நண்பனை நேசிக்க முடியவில்லையே, அன்பில்லாத அந்த பாவத்தை எனக்கு கண்டுபிடிக்க முடியவில்லை. ஆவியானவரே இருதயத்தை ஆராய்ந்து அறிகிறவர், அவரே உள்ளந்திரியங்களை அறிகிறவர். அவரின் உதவியைக் கொண்டு நம் அந்தரங்க இரகசிய பாவங்களை கண்டு கொண்டு அதை அறிக்கை செய்து தேவனோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். மேற்பூச்சாய் ஜெபிக்கிறவர்கள் இதை காண முடியாது. அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடக்க வேண்டும். நம்மில் இருக்கும் இருள் முற்றிலும் மாற்றப்பட வேண்டும். இதை வாசிக்கும் அன்பரே, எப்போதாவது ஆழமாய் உம் ஜீவியத்தின் அந்தரங்கங்களை ஆராய்ந்து பார்த்து பாவங்களை உணர்ந்த உடன் அறிக்கை செய்து இருக்கிறீர்களா? நீங்கள் சபையில் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் பரவாயில்லை, பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்பு கேட்க வேண்டும். கர்த்தரிடம் எதையும் மறைக்காமல், அறிக்கை செய்வதில் உண்மையாய் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மை நேசிப்பதால்தான் தவறு செய்த உடனே நமக்கு உணர்த்திவிடுகிறார். அதை உடனே அறிக்கை செய்து, விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் அது நம் ஆவிக்குரிய வாழ்வை அழித்துவிடும்.

உதாரணமாக உங்கள் வீட்டு தோட்டத்திலிருந்து ஜன்னல் வழியாக நீங்கள் படுக்கப்போகுமுன் ஒரு விஷப்பாம்பு உங்கள் வீட்டிற்குள் வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுவோம். எனக்கு அதிக களைப்பாய் இருப்பதால் நாளைக்கு அதை அடித்து கொன்று விடுவோம் என்று வீட்டு விளக்குகளை அனைத்துவிட்டு படுத்து இளைப்பாறுவீர்களா? இல்லை. அலறி அடித்து

ஊர்மக்களையே கூப்பிட்டு, அந்த விஷப்பாம்பை அடித்துக் கொன்று, வீட்டுக்கு வெளியே போட்ட பின்பு தான் தூங்குவீர்கள் அல்லவா? அதேபோல பாவம் என்பது விஷபாம்பைவிட கொடிதானது அதை அறிக்கை செய்து, விட்டு விட்டு ஜெபித்தால்தான் ஜெபம் கேட்கப்படும். தேவனோடு தொடர்பு கொள்ள முடியும்.

## 4-3 காத்திருந்து ஜெபித்தல்

காத்திருந்து ஜெபிப்பது என்பது சும்மா அமைதியாய் இருப்பது அல்ல காத்திருந்து ஜெபிக்கும்போது மூன்று காரியங்கள் நடைபெற வேண்டும் என்று ஜான் மேக்ஸ்வெல் ஜெபப் பங்காளர்கள் என்னும் புஸ்தகத்தில் எழுதுகிறார். நாம் காத்திருக்கும்போது கர்த்தர் பேச நாம் எதிர்பார்ப்போடு இருக்க வேண்டும்.

பாவம் என்பது விஷ பாம்பைவிட கொடிதானது அதை அறிக்கை செய்து, விட்டு விட்டு ஜெபித்தால் தான் ஜெபம் கேட்கப்படும். தேவனோடு தொடர்பு கொள்ள முடியும்.

### 4-3-1 கர்த்தர் உங்களை நேசிக்கிறார்

கர்த்தர் நம்மை நேசிக்க இடம் கொடுக்க வேண்டும். அவர் நம்மை நேசிக்க ஆவலோடு இருக்கிறார். அவர் நம்மை மதிக்கிறார். பிசாசு எப்பொழுதும் நம்மை குற்றப்படுத்திக் கொண்டே இருப்பான். தேவன் நம்மோடு அன்பாக இல்லை, கோபமாக, வருத்தமாய் இருக்கிறார் என்ற பொய்யை நம் இருதயத்தில் விதைத்து நம்மை வேதனைப்படுத்தி இருப்பான். ஆனால் நீங்கள் ஜெபத்தில் காத்திருக்கும்போது அவர் நம்மை நேசிக்க நேரம் கொடுங்கள் அவர் நம்மை பாராட்டுவார், அவருடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துவார். இதை வாசிப்பதை நிறுத்தி, சற்று கர்த்தர் உங்களை நேசிப்பதை உணர நேரம் கொடுங்கள். பிசாசு உங்களை குற்றப்படுத்தின வேதனையை விட்டு வெளியே வந்து விடுங்கள்.

### 4-3-2 உன்னை ஆராய்ந்துபார்ப்பார்

ஜெபத்தில் காத்திருக்கும்போது கர்த்தர் உன் இருதயத்தை ஆராய்ந்து பார்க்க நேரம் கொடுங்கள். இது தேவனோடு கொண்டுள்ள நல்ல உறவுக்கு அதிக அவசியம். அவர் உங்களை நேசிக்கிறபடியால் உங்கள் தவறுகளை உணர்த்தி உங்களுக்காக பரிந்து பேசுகிறதை இந்த நேரத்தில் காண முடியும்.

### 4-3-3 செய்ய வேண்டிய காரியங்களை காண்பிப்பார்

ஜெப நேரத்தில் நீங்கள் காத்திருக்கும்போது அந்த நாளில் நீங்கள் என்ன காரியத்தை அவருக்காக செய்ய வேண்டும் என்பதை காண்பிப்பார். அவருடைய இருதய வாஞ்சை என்ன என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துவார். இளைப்படைந்த ஆத்துமாக்களுக்கு சமயத்துக்கேற்ற வார்த்தைகளைப் பேச சொல்லிக் கொடுப்பார். இயேசுவும் பிதாவோடு ஒவ்வொரு காலை நேரத்திலும் இப்படி காத்திருந்தார் என்று வேதம் சொல்லுகிறது.

**ஏசா 50:4** இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார். காலைதோறும் என்னை எழுப்புகிறார், கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்.

**ஏசாயா 40:31** கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

**சங் 27:14** கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

**சங் 31:24** கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

## 4-3-4 வேதாகம நேரம்

ஜெப நேரத்தில் வேதத்தை வாசித்து, தியானம் செய்ய வேண்டும். ஜெபமும், வேதத்தை வாசித்து தியானம் செய்வதும் ஒரு பறவையை பறக்க வைக்கும் இரு சிறகுகள் போன்றது. பறவைக்கு ஒரு சிறகுமாத்திரம் இருந்தால் தரையில் சுற்றி சுற்றிதான் வரும். பறக்க முடியாது. ஜெபமும், வேதம் வாசித்து ஜெபிப்பதும் ஒரு விசுவாசியின் உன்னத அனுபவத்திற்கு இன்றியமையாத ஒன்று. அநேகர் கதை புஸ்தகம் போலவும், சரித்திர புஸ்தகம்போலவும் வேதத்தை வாசிப்பார்கள். ஆனால் தியானம் செய்யமாட்டார்கள். சிலருக்கு ஒழுங்காக முழு வேதத்தையும் வாசிக்க திட்டங்கள் இல்லை. தங்களுக்கு இஷ்டமான சிறிய பகுதிகளை மாத்திரம் வாசித்து பழகுகிறார்கள். இன்னும் சிலர் குறிசொல்லும் புஸ்தகம்போல் வேதத்தை திறந்து ஒரு பகுதியில் விரல் வைத்து வேதம் என்ன சொல்லுகிறது என்று வாசிக்கிறார்கள். சிலருக்கு வியாதி, நோய் வரும்போது படுக்கை பக்கம் வைக்க வேதத்தை தேடுகிறார்கள். வேதத்திலுள்ள சகலவற்றையும் அறிந்து கொள்ள, முழுவேதத்தையும் வாசிக்க, பொதுவான திட்டம் இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு நாளைக்கு ஐந்து பக்கம் (அதிகாரமல்ல) வாசித்தால் முழுவேதாகமத்தையும் ஒரு வருடத்தில் வாசித்து, புதிய ஏற்பாட்டை இன்னொரு முறை கூட வாசித்துவிடலாம். அதுபோக ஒவ்வொரு நாளும் ஒரு அதிகாரத்தை நிதானமாக வாசித்து, சில வசனங்களைக் குறிப்பிட்டு நம்மோடு பேசும் அந்த வசனங்களை திரும்ப திரும்ப வாசித்து, அதற்குரிய ஒத்துவாக்கியங்களை வேதத்தின் மற்ற பக்கங்களிலிருந்து ஆவியானவர்

அவ்வசனத்தைக் கொண்டு பேச இடம் கொடுத்து, வாழ்வில் மாற்றம் கொண்டுவர, மறுரூபம் கொண்டு வர, வேதத்தை தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்த வேதப்பகுதியை வைத்து ஜெபம் செய்ய வேண்டும். தேவனை துதிப்பதற்கு சில வசனங்கள் இருந்தால் அதை வைத்து தேவனைத் துதிக்க வேண்டும். வாக்குத்தத்த வசனங்கள் இருந்தால் அதைப்பிடித்து ஜெபிக்க வேண்டும். நம் பாவங்களை உணர்த்தும் வசனம் இருந்தால் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைய வசனம் இருந்தால் தான் வளர முடியும். அந்த வேதவசனத்தைக் கொண்டு ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபநேரம் நம் வாழ்வில், ஆவியானவரின் உதவியுடன் வசனத்தை கொண்டு மறுரூபம் அடையச் செய்வார். இதுவரை இப்படி ஜெபம் செய்யாதிருந்தால் இன்று, இப்பொழுதே இதை செய்து அப்பியாசப்படுத்துங்கள். வாழ்வில் சந்தோஷம் அடைவீர்கள்.

## 4-3-5 பரிந்து பேசும் ஜெபம்

நாம் நம்முடைய தேவைகளுக்கே எப்பொழுதும் ஜெபித்துப் பழகிவிட்டோம். மற்றவர்களுக்காக ஜெபிக்கிற நேரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து நபரைத் தெரிந்தெடுத்து, அல்லது முஸ்லீம் நாடுகளை தெரிந்தெடுத்து, சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களைக் கண்டுபிடித்து, புண்ணிய ஸ்தலங்களை பற்றி அறிந்து, விடாமல் பரிந்து பேசும் ஜெபம் செய்ய வேண்டும். நான் ஒரு முறை நூறு நாட்கள் ஒவ்வொருநாளும் அதிகாலை 5 மணிக்கு ஆலயத்திற்கு சென்று உலகத்திலுள்ள 100 முஸ்லீம் பட்டணங்களை தெரிந்தெடுத்து அதற்காக ஜெபித்தேன். நானும் என் மனைவியும் சேர்ந்து சந்திக்கபடாத மக்கள் கூட்டங்களுக்காக பரிந்து பேசும் ஜெபம் செய்தோம். அந்த நாட்கள் மிகவும் சந்தாஷமாக இருந்தது. இரட்சிக்கப்படாத என் குடும்பத்திலுள்ள சகோதர சகோதரிகளுக்காக

என் வலது கையிலுள்ள ஐந்து விரலில் ஒவ்வொரு விரலிலும் ஒரு நபரை ஞாபகம் வைத்து மூன்று மாதங்கள் விடாமல் ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு, அத்தனை பேரையும் இரட்சித்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக. பரிந்து பேசும் ஜெபம் செய்ய பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவை. பரிந்து பேசும் ஜெபத்தில், பதில் கிடைக்கும் வரைக்கும், விடாமல் ஜெபிக்க வேண்டும்.

**1 தீமோத் 2:1-3** நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் களையும் பண்ண வேண்டும்.

நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.

நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

இந்த வசனங்கள் பரிந்து பேசும் ஜெபத்தைக் குறித்து நமக்கு போதிக்கிறது. இந்த ஜெபம் தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமான ஜெபம் என்று வேதம் சொல்லுகிறது. இதை வாசிக்கும்போது ஆவியானவர் உங்கள் குடும்பத்தில் இரட்சிக்கபடாத நபர்களுக்காய் ஜெபிக்க ஏவவில்லையா? முஸ்லீம்

நாடுகளில் சுவிசேஷத்திற்கு கதவு திறக்க ஜெபிக்கத் தூண்டவில்லையா? இன்றே பரிந்து பேசி ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

### 4-3-6 விண்ணப்ப ஜெபம்

இது கர்த்தர் சமூகத்தில் ஆயத்தம் செய்து, பாவங்களை அறிக்கைச் செய்து, காத்திருந்து ஜெபித்து, மற்றவர்களுக்காய் ஜெபித்த பின்பு, உங்கள் தேவைகளுக்காய் ஜெபிக்கும் நேரம். உங்கள் வாழ்வில் எத்தனையோ தேவைகள் உண்டு. அவைகளை தேவனிடத்தில் சொல்வது தவறு அல்ல. உங்கள் மனபாரங்களையும் உங்கள் உண்மையான தேவைகளையும் தேவனிடத்தில் வைத்துக் கேட்க வேண்டும். தேவன் பதில் கொடுப்பார்.

**சங் 55:22** கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

**1 பேதுரு 5:7** அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

உங்கள் சரீரபிரகாரமான தேவைகளிலும், ஆத்மீக ஆவிக்குரிய தேவைகளிலும் அவர் சித்தம் நடைபெறட்டும் என்ற உணர்வோடு ஜெபத்தில் விண்ணப்பம் செய்யுங்கள்.

### 4-3-7 கர்த்தருக்கு நன்றி சொல்லி துதித்து ஆராதனை செய்வது

கர்த்தருக்கு நன்றி சொல்லி துதித்து ஆராதனை செய்வதை ஜெபத்தின் முதல் பகுதியிலும், கடைசி பகுதியிலும் செய்ய வேண்டும். இயேசு சொல்லிக் கொடுத்த பரமண்டல ஜெபத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் துதி இருப்பதை காணலாம். ஜெபம் ஆரம்பிக்கும்போது உற்சாகம் இல்லாவிட்டால், கர்த்தர் செய்த நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணிப்பாருங்கள். பிசாசு

உங்களுக்கு இல்லாத காரியத்தை நினைவுபடுத்துவான். நடக்காத காரியங்களையும், பிரச்சனைகளையும் பெரிதுபடுத்துவான். அவை உங்களுக்கு சோர்வை கொண்டு வரும். ஆகையால் கர்த்தர் உங்களுக்குச் செய்த நன்மைகளை எண்ணி நன்றி சொல்லும்போது உங்கள் உள்ளம் விசுவாசத்தால் நிரம்பும்.

நாம் துதிப்பதற்காகத்தான் கர்த்தர் நம்மை உருவாக்கினார். வெளிபடுத்தினவிசேஷ புஸ்தகத்தை வாசித்தால், பரலோகம் முழுவதும் துதியினால் நிரம்பி இருப்பதைக் காண்கிறோம். கர்த்தர் எப்படி இருக்கிறார் என்று நினைத்து அவரை ஆராதிக்க வேண்டும். கர்த்தர் நமக்கு என்ன செய்து இருக்கிறார், என்ன செய்யப்போகிறார் என்று அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

### 4-3-8 ஜெபத்தில் காத்திருக்கும்போது கர்த்தர் பேசின காரியங்களை விசுவாசத்தோடு அனுபவமாக்கும் நேரம்

நம் கர்த்தர் நம்மோடு பேசும் தெய்வம். அவருக்காக காத்திருக்கும் போது சில காரியங்களை காண்பிப்பார். அவைகளை விசுவாசிக்க வேண்டும். அவைகளை செய்ய தேவ பெலனை பெற வேண்டும். சிலநேரங்களில் கர்த்தர் பேசும் காரியங்களை பிசாசு மறக்கச் செய்துவிடுவான். அல்லாவிட்டால் அந்த வித்துகளை பிசாசு பொறுக்கிவிடுவான். அவைகள் நமக்கு முப்பதும் அறுபதும் நூறுமாய் பலன் கொடுக்க ஆவியானவரின் ஒத்தாசையை நாடி ஜெபிக்க வேண்டும். காலேப் என்ற பக்தனின் பெயருக்கு திராணியுள்ளவன் என்று அர்த்தம். எதிலே அவன் திராணி உள்ளவன்? கர்த்தர் அவனோடு மோசேயைக் கொண்டு பேசின வார்த்தைகளை 45 ஆண்டுகள் கழித்தும் அவன் மறக்கவில்லை. நாற்பதாவது வயதில் பேசப்பட்ட அந்த வார்த்தையை அவனுடைய 85-ம் வயதுவரைக்கும் அவன் நினைவு கூர்ந்ததை விசேஷித்த வரம் என்று சொல்லலாம். ஆண்டவர் பேசும் வசனங்களை மறந்துவிடுவோம். விசுவாசத்தோடு கர்த்தர் நமக்கு பேசின காரியங்கள் நிறைவேறவும் அதை அனுபவத்தில் கொண்டுவரவும் ஜெபிக்க வேண்டும்.

இப்படி பல மணிநேரம் தேவசமூகத்தில் தேவன் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செய்யும் காரியங்களுக்கு ஜெபித்து ஜெயம் பெறலாம். இன்னும் நடைமுறையில் ஜெபிக்கும் சில மாதிரி ஜெபங்களைக் குறித்துப் பார்ப்போம்.

பன்னிரெண்டு குறிப்புகளை தேவசமூகத்தில் காத்திருந்து எழுதிக் கொள்ள வேண்டும். அவைகளில் ஒவ்வொரு குறிப்புக்கும் ஐந்து நிமிடம் எடுத்தால், ஒரு மணிநேரம் நன்றாய் ஜெபிக்கலாம்.

**உதாரணமாக**

1. துதி செய்
2. நன்றி சொல்
3. காத்திரு
4. கவனி
5. வேதம்வாசி
6. தியானம் செய்
7. பரிந்து பேசி ஜெபி
8. விண்ணப்பம் செய்
9. பாடல்பாடு
10. பாவ அறிக்கை செய்
11. பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறு
12. துதி செய்து ஆராதனை செய்



# 5. மாதிரி ஜெபங்கள்

**பரமண்டல ஜெபத்தை வைத்து ஜெபிப்பது எப்படி ?**

5-1-0 இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு மாதிரியாக கற்றுக் கொடுத்த ஜெபத்தை **லூக் 11:2-4-**ம் வசனங்களில் வாசிக்கிறோம்.

அதற்கு அவர் நீங்கள் ஜெபம்பண்ணும்போது பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்.

எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே, எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், என்று சொல்லுங்கள் என்றார்.

**5-1-1 பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே என்று ஜெபம் ஆரம்பிக்கிறது.**

ஜெபத்தில் முதலாவது பரலோகத்தில் உள்ள தேவனோடு நமக்கு உள்ள ஐக்கியத்தை கற்றுக் கொள்ளுகிறோம். பரலோகத்திலிருக்கிற தேவன் எங்கேயோ தூரத்தில் இருக்கிறார் பூமியில் இருக்கிற நமக்கு எட்டாத தூரம் என்று எண்ணிவிடாதபடி அவரோடு தகப்பனிடம் மகன் தொடர்பு கொள்வது போன்று ஐக்கியம் கொள்ள வேண்டும்.

**5-1-2 உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக**

இது தேவனுக்கு ஜெபத்தில் செய்யும் ஆராதனை நேரத்தை குறிக்கிறது. தேவனுடைய பல நாமங்களைச் சொல்லி அவர் எப்படி இருக்கிறார் என்று உணர்ந்து அவரை ஆராதிக்க வேண்டும்.

**5-1-3 உம்முடைய ராஜ்யம் வருவதாக**

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்பும் அல்ல. அது நீதியும் சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாம். தேவனுடைய ராஜ்யம் நம் வீட்டிலும், சபையிலும், தேசத்திலும் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

**5-1-4 உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப் படுவதாக**

ஜெபத்தில் மனிதர்கள் அதிகமாக தங்கள் சித்தமும், பிரியமும் நடைபெற ஜெபிப்பது வழக்கம். ஆனால், பரலோகத்தில் தேவசித்தத்தை தவிர வேறுயாருடைய சித்தமும் நடைபெறுவதில்லை. அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப் பரலோகத்தில் தன் சித்தம் நிறைவேற்ற நினைத்தபோது அவன்

சாத்தானாக மாறிவிட்டான். ஒவ்வொரு காரியத்திலும் தேவசித்தம் நிறைவேற ஜெபிக்க வேண்டும்.

**5-1-5 எங்களுக்கு வேண்டிய ஆகாரம் அன்றன்று எங்களுக்குத் தாரும்**

இது நம்முடைய தேவைகளுக்காக ஜெபிப்பதாகும். கர்த்தர் நம் ஆவிக்குரிய தேவைகளை மாத்திரம் சந்திப்பவர் அல்ல. நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகளிலும் கரிசனை உள்ளவர் என்பதை இது காண்பிக்கிறது.

**5-1-6 எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும் நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே.**

நம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு தேவனிடத்தில் பெற வேண்டும். அதே சமயத்தில் மற்றவர்களுக்கும் மன்னித்து நல்ல உறவை மனிதர்களோடு ஏற்படுத்த வேண்டும். தேவனிடத்திலும், காண்கிற மனிதர்களிடத்திலும் அன்பு கூறும் கற்பனையை நிறைவேற்றும் ஜெபம் இது. நான் கடவுளோடு நல்ல உறவு வைத்துக்கொண்டு, மனிதர்களோடு பிரிவினை ஆவியில் இருப்பது ஜெபத்திற்கு பெரிய தடை. மற்றவர்களை நாம் மன்னிப்பது போல கர்த்தர் நமக்கு மன்னித்திருக்கிறார்.

**5-1-7 சோதனைக்குட்படப்பண்ணாமல்**

மனிதர்களாகிய நமக்கு ஒவ்வொரு நாளும் பல சோதனைகள் காத்திருக்கும். சோதனையில் விழாமல் இருக்க ஜெபம் தேவை இதற்கு பரிசுத்த ஆவியின் பெலன் வேண்டும்.

**மத் 26:40,41** பின்பு அவர் சீஷர்களிடத்தில் வந்து அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்

கூடாதா? அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய் என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

இயேசு சீஷர்களை பார்த்து சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணச் சொன்னார்.

## 5-1-8 தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.

சாத்தான் விசுவாசிகளுக்கு தீமை செய்ய காத்திருக்கிறான் கர்த்தர் நம்மை சுற்றிலும் வேலி அடைத்திருக்கிறார். சாத்தான் அவைகளைத் தகர்த்து தீமை செய்ய, மனுஷ கொலைபாதகனாய் இருக்கிறான். மனுஷரை தீமையாகிய பாவத்திற்குள் தந்திரமாய் தள்ளப்பார்ப்பான். கர்த்தரை நோக்கி தீமையின்று எங்களை இரட்சியும் என்று ஒவ்வொருநாளும் ஜெபிக்க வேண்டும்.

## 5-1-9 ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே

கடைசியாக கனத்தையும், மகிமையும் கர்த்தருக்கே செலுத்த வேண்டும். நம்முடைய ஜெபத்தின் நோக்கம் அவருக்கு மகிமை செலுத்த வேண்டும் என்பதே. அவருடைய ராஜ்யம் கட்டப்பட ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். வல்லமை அவருடையது என்று நம்மை தாழ்த்த வேண்டும்.

## 5-1-10 ஆமென் என்று ஜெபம் முடிக்க வேண்டும்

ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தம். மேலே ஜெபித்த ஜெபங்கள் எல்லாம் அப்படியே நடக்கட்டும் என்று விசுவாசத்தோடு ஜெபத்தை முடிக்க வேண்டும். இந்த ஜெபத்தை இப்படி மாதிரியாக வைத்து நாம் ஜெபிக்க வேண்டும்.

கர்த்தரின் ஜெபத்தை மாதிரியாக வைத்து ஜெபிக்க வேண்டுமே தவிர பரமண்டல ஜெபத்தை கிளிப்பிள்ளைப் பாடம் போல சொன்னதையே அர்த்தமின்றி எல்லா இடங்களிலேயும் சொல்லக் கூடாது. சில சபைகளில் பரமண்டல ஜெபத்தை செய்தாலே பாவம் என்று கருதுகிறவர்கள் உண்டு. சிலர் ஜெபமாலைகளில் வைத்து இதை அர்த்தமின்றி ஜெபிக்கின்றனர். இந்த கர்த்தரின் ஜெபத்தை மாதிரியாக வைத்து ஜெபித்தால் ஜெபவாழ்வில் மறுரூபமடைவோம்.

## 5-2-0 ஆசரிப்பு கூடார ஜெபம்

இன்னொரு மாதிரி ஜெபம் ஆசரிப்பு கூடார ஜெபமாகும். இது பரலோகத்துக்கு ஒத்த ஆராதனை முறைகளை நமக்கு




காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன், வாசம் செய்ய ஒரு ஸ்தலத்தை உண்டு பண்ணுவாயாக என்று மோசேயிடம் சொன்னார்.

**யாத் 25:8** அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.

மோசே மலையின் மேல் ஏறிப்போய் 40 நாட்கள் தேவ சமுகத்தில் இரவு பகலாய் இருந்து, ஆசரிப்பு கூடாரம் எப்படி ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற வரைபடத்தைப் பெற்றான். புதிய ஏற்பாட்டுக் காலத்தின் ஆராதனைக்கு அது நிழலாய் அமைவதை நாம் காணலாம். அதைக் குறித்த மாதிரியின் ஜெப ஆராதனையை சுருக்கமாய் வாசிப்போம். அதன்படி ஜெபித்து ஆசீர்வாதம் காண்போம்.

## 5-2-1 பலிபீடம்

ஜெபிக்கும் போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்படைக்க வேண்டும். நம்முடைய மனது மறுரூபமாக வேண்டும். இப்பிரபஞ்சத்தின் வேஷங்களை அகற்ற வேண்டும். கிறிஸ்துவின் சிலுவை பலி, செய்து முடித்த கிரியைகளை, நமக்கு முன்பாக கொண்டு வரவேண்டும். பின்பு அவருடைய இரத்தம் நமக்கு செய்யும் நன்மைகளை நினைத்து நமது மனசாட்சி குற்றமுள்ள தன்மையிலிருந்து விடுதலை பெற ஜெபிக்க வேண்டும். இப்படியாக தேவசமுகத்தை உணர வேண்டும்.

## 5-2-2 தண்ணீர் தொட்டி

தேவனுடைய வசனத்தைக் கொண்டு நம்மை கழுவ வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்மை சுத்திகரிக்க நம்மை ஒப்படைக்க வேண்டும். ஆவியானவர் நம்முடைய அந்தரங்க பாவங்களையும், இரகசிய பாவங்களையும் நமக்குக் காண்பிப்பார். அவைகளை அறிக்கை செய்து ஆவியானவரால் கழுவப்பட வேண்டும். அவர் ஒளியாய் இருப்பது போல் நாம் ஒளியில் நடந்தால் அவரோடு ஐக்கியப்பட முடியும். அப்பொழுது அவருடைய இரத்தம் நம்மைக் கழுவி சுத்திகரிக்கும். அவருடைய ஒளிக்கு முன்பாக நாம் வரும்போது நாம் எதையும் மறைக்கக்

கூடாது. நம்முடைய வாழ்வில் இருக்கும் இருள் முற்றிலும் மறையும். ஜெப வாழ்வில் இது முக்கியம்.

**5-2-3 தேவசமூகத்தின் அப்பம்**

தேவனுடைய வேதவசனமே அப்பம். அது நமக்கு தினந்தோறும் புதிதாக கிடைக்கும். ஜெபத்தில் வேதவசனம் முக்கிய இடம் பெறவேண்டும். சிலர் ஜெபம் செய்வார்கள், வேதவசனம் வாசித்து தியானிப்பதில்லை. மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். தேவசமூகத்தில், வேதத்தோடு காத்திருக்கும் போது, தேவவசனம் நமக்கு அப்பமாக வரும். அது தான் நமக்கு ஆவிக்குரிய வாழ்வில் பெலன்.

**5-2-4 குத்துவிளக்கு**

இது நம்முடைய சாட்சியின் ஜீவியத்தை குறிக்கிறது. நாம் இந்த உலகத்திற்கு வெளிச்சம் கொடுக்க அழைக்கப்பட்டிருக் கிறோம். உலகத்தில் இருள் இருக்கிறது. வெளிச்சம் இருளை விரட்டி விடும். இருள் வெளிச்சத்தை மேற்கொள்ள முடியாது. உங்கள் நற்கிரியைகள் தான் மக்களுக்கு வெளிச்சமாய் இருக்க முடியும். வீட்டிலும், வேலை ஸ்தலத்திலும், சபையிலும், ஊரிலும் சாட்சியாய் இருக்க நாம் ஜெபிக்க வேண்டும்.

**5-2-5 தூபபீடம்**

தேவசமூகத்தில் நாம் தேவனை ஆராதிக்க வேண்டும். நம்முடைய துதி தேவனுக்கு வாசனை நிறைந்த தூபமாக போக வேண்டும். ஜெபத்தில் முக்கியமானது ஆராதனை. துதிகளின் நடுவில் தான் நம் தேவன் வாசம் செய்கிறார். அவருடைய நாமத்தைச் சொல்லி அவரைத் துதிக்க வேண்டும். அவர் எப்படி இருக்கிறார் என்று நினைத்து அவரை ஆராதிக்க வேண்டும். அவர் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஆராதிக்க வேண்டும். இந்த

ஆராதனை நம்மை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வரும்.

**5-2-6 உடன்படிக்கை பெட்டி**

மகாபரிசுத்த ஸ்தலத்தில்தான் உடன்படிக்கை பெட்டி இருக்கும். இது தேவசமூகத்தை குறிக்கிறது. ஜெபத்தில் தேவசமூகத்தை அதிகம் உணர வேண்டும். இது தேவனை சந்திக்கிற இடம். இங்கே தேவசத்தம் கேட்கிற இடம். மற்ற சத்தங்கள் இங்கு கேட்காது. பலிபீடம் இருக்கும் இடத்தில், ஆடு மாடுகள் பலியிடப்படும் போது மனிதர்கள் சத்தம் கேட்கும். ஆனால் மகாபரிசுத்த ஸ்தலத்தில் தேவசமூகம் இருக்கிறது. அங்கே நீங்களும் தேவனும் மாத்திரம் உறவாடும் ஓர் இனிய ஐக்கியம் உண்டு. இதுதான் ஜெபத்தின் உச்ச கட்ட அனுபவமாகும். இங்கேதான் தேவன் தம் இருதயத்தை நமக்கு வெளிப்படுத்துவார். நாம், நம் இரகசியங்களை அவரோடு பகிர்ந்து கொள்ளுவோம். பெரிய ஆனந்த சந்தோஷமும், திருப்த்தியும் உண்டாகும்.

இப்படி ஆசரிப்பு கூடார ஜெபம் செய்து அனுதின வாழ்வில், ஜெபத்தில் வளர வேண்டும். இந்த மாதிரி ஜெபத்தை இன்னும் நீங்கள் தேவசமூகத்திலிருந்து விளக்கம் கேட்டு பலமணி நேரம் ஜெபிக்கலாம்.

1. தனித்து ஜெபிக்கும் திட்டம் உங்கள் ஜெப வாழ்வை மறுரூபப்படுத்தும், இந்த திட்டம் வைத்து ஜெபிக்க இன்றே ஒப்புக் கொடுங்கள்.

2. இயேசு மாதிரியாக சொல்லிக் கொடுத்த பரமண்டல ஜெபம் வைத்து ஜெபித்து பழகுங்கள்.

3. ஆசரிப்பு கூடார ஜெபம் நீண்டநேரம் ஜெபிக்கும் கிருபையை கொடுக்கும்.

உங்கள் தனி ஜெப வாழ்வை மறுரூபமாக்க இன்றே நீண்ட நேரம் தரமான ஜெபம் செய்ய அர்பணியுங்கள்.

# இயேசுகிறிஸ்துவின் ஜெபம்

## 5-3 இயேசுகிறிஸ்துவின் ஜெபம்

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் திரள் கூட்டமான ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார். பிணியாளிகளை சுகமாக்கினார். பலவிதமான அற்புதங்களைச் செய்தார். பிதாவின் சித்தத்தின்படியே அவர் உலகத்தில் வந்த நோக்கத்தை நிறைவேற்றி முடித்தார். அநேக நாட்களில் அவருக்கு இளைப்பாறுதலுக்கு போதிய நேரம் கிடைக்கவில்லை. சாப்பிடுவதற்கும் நேரம் இல்லாமல் இருந்தது என்று நாம் வாசிக்கிறோம். அப்படியிருந்தாலும் அதிகமான நேரம் ஜெபத்திலேயே செலவு செய்தார். இயேசுகிறிஸ்து பிதாவுக்கு சித்தமானவைகளையே செய்து வந்தார். அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே எனக்கு போஜனமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் அவர் அதிக நேரம் ஜெபத்தில் பிதாவோடு தரித்திருந்ததும், விண்ணப்பம் பண்ணியதும் தேவனுடைய சித்தம் என்று அறிகிறோம். தேவனுடைய சித்தத்தின்படியே இயேசுகிறிஸ்து பிதாவுக்கு பிரியமானவை

களையே செய்து வந்தார். ஆகவே பிதா என்னைத் தனியே இருக்க விடவில்லை என்று இயேசுகிறிஸ்துதாமே சொல்லியிருக்கிறார். அதனால்தான் பிசாசானவன் இயேசுவை மேற்கொள்ள முடியவில்லை. பிதாவின் வல்லமையினால் தன்னுடைய வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே இருந்தார். ஜெபத்தின் மூலம் தேவனோடு இணைந்து தொடர்பு கொண்டிருந்ததால்தான் அவர் இப்படி செய்ய முடிந்தது. ஆகவே ஜெபம்தான் இதற்கு அஸ்திபாரமாக இருந்தது என்று சொல்லலாம்.

இயேசுகிறிஸ்துவைப்போல ஜெபித்தவர்கள் யாரும் இல்லை. அவர் ஜெபம் செய்வது எப்படி என்று சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்தார். அவருடைய ஜெபவாழ்க்கையே மற்றவர்களை அவரண்டையில் இழுக்கக்கூடியதாக இருந்தது. ஆகவே தான் ஒருமுறை அவர் ஜெபித்து முடித்த போது சீஷரில் ஒருவன் இயேசுவை நோக்கி, யோவான் ஸ்நானகன் தன் சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்தது போல எங்களுக்கும் கற்றுதாரும் என்று கேட்டான். அவருடைய ஜெப வாழ்க்கை தான் இப்படி கேட்கும்படி அவனைத் தூண்டிற்று. இயேசுதான் ஜெபத்திற்கு முன்மாதிரியாக விளங்கினார். ஜெபம் செய்வதைபற்றி ஏதாவது கற்றுக்கொள்ள வேண்டுமானால் இயேசுவிடமிருந்துதான் கற்றுக்கொள்ள முடியும்.

இந்த நாட்களில் ஜெபம் செய்வதை பற்றி கற்றுத்தாருங்கள் என்று சொல்லுபவர்களும், கற்றுக்கொடுக்கிறவர்களும் வெகுசிலர்தான். வேதாகமக் கல்லூரியிலும் கூட ஜெபத்தை பற்றி கற்றுத்தருபதைவிட, பிரசங்கம் செய்வது எப்படி என்றுதான், அதிகமாக கற்றுத் தருகிறார்கள். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஜெபிப்பதாகவே தெரியவில்லை. ஜெபத்தை பற்றிய அறிவுமில்லை. ஜெபிக்க வாஞ்சையும் இல்லை. ஆகவே தேவனிடத்திலிருந்து ஜெபங்களுக்கு பதில் பெற்றுக் கொள்ளுவதும் இல்லை. ஆகவே

இயேசு காட்டிய மாதிரியின்படியே ஜெபம் செய்வதற்கு ஒவ்வொருவரும் கற்றுக்கொண்டு நம்முடைய ஜெப வாழ்க்கையில் பெருமளவில் ஒரு முன்னேற்றத்தை காண்போமாகில் தேவவல்லமையை இந்த உலகத்திற்கு நாம் வெளிப்படுத்த முடியும்.

இயேசுவினுடைய ஜெபவாழ்க்கையை நாம் பார்க்கும்போது ஜெபிப்பதற்கு அவர் ஒரு இடத்தையும் அதற்கென்று நேரத்தையும் ஒதுக்கி இருந்தார்.

**மாற்கு 1:35** அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்திரமான ஒரிடத்திற்குபோய் அங்கே ஜெபம்பண்ணினார் என்று வாசிக்கிறோம்.

அதுபோல அவர் சாயங்காலமான போது தனியாக மலையின் மேல் ஏறி ஜெபித்தார் என்று நாம் மத் 14:23-ல் காண்கிறோம்.

**மத் 14:23** அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒருமலையின்மேல் ஏறி சாயங்காலமான போது அங்கே தனிமையாயிருந்தார்.

மேலும் ஒரு மலையின்மேல் ஏறி இராமுழுவதும் இயேசுகிறிஸ்து ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் என்றும் பார்க்கிறோம்.

**லூக் 6:12** அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.

இந்த வசனங்களிலிருந்து இயேசுகிறிஸ்து ஜெபிப்பதற்கான ஒரு தனி இடத்தை தெரிந்துக் கொண்டது மாத்திரமல்லாமல், நேரத்தையும் குறிப்பிட்டு தனியாகப்போய் ஜெபித்தார்.

இதுபோலவே தான் இயேசு வனாந்திரமான ஒரு இடத்திற்கு சென்று தனிமையாக ஜெபித்தார் என்று லூக் 5:16 மற்றும் லூக் 11:1-ல் வாசிக்கிறோம்.

**லூக் 5:16** அவரோ வனாந்திரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்.

உலக வேலைகளை ஒதுக்கிவிட்டு நேரிடக்கூடிய இடையூறுகளையும் தள்ளிவிட்டு, தனியே அதிகாலை நேரம், சாயங்கால நேரம், இரவு நேரம், ஆகிய சமயங்களில் இயேசு ஜெபித்தார். இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான பாடமாகும். ஜெபத்தில் ஒழுங்கற்று இருப்பவர்கள் அதற்கென நேரமும் இடமும் ஒதுக்காதவர்கள் சரியானபடி ஜெபிக்க முடியாதபடிக்கு சாத்தான் தடைகளை உண்டுப்பண்ணக் கூடியவனாக இருக்கிறான். ஆகவே ஜெபிக்க விரும்புகிறவர்கள் இவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். உலக காரியங்களும், உலக பாரங்களும் நம்முடைய மனதைப் பற்றிக்கொள்ளும் முன்பே தேவசமுகத்திற்கு அதிகாலையில் சென்று ஜெபிப்பது மேலானது. அதுபோலவே சாயங்கால நேரத்திலும் ஜெபிக்கப் பழக வேண்டும். விசேஷித்த காரியங்களுக்காக 'அல்லது பிரச்சனைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும். அவை நமக்கு பதிலைக் கொண்டு வரும். இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது ஜெபம் செய்தார். அதே நேரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அநேகபேர் உண்டு. ஆனால் ஒருவராவது ஜெபித்ததாக சொல்லபடவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து ஜெபித்தார். அதனால் வானம் திறந்தது பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல வந்து இறங்கினார். வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் திரித்துவ தேவனை இந்த சூழ்நிலையில் பார்க்கிறோம். காரணம் இயேசுவின் ஜெபம்தான். இதுபோல இயேசுகிறிஸ்து வனாந்திரத்தில் சோதிக்கப்படுவதற்கு முன்பு நாற்பது நாள் உபவாசம்பண்ணி

ஜெபித்தார். ஆகையினால் சோதனைகளிலிருந்து ஆண்டவர் ஜெயம் பெற்றார்.

**மத் 4:2** அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

இதுபோலவே இயேசுகிறிஸ்து பாடுபட்டு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு கெட்செமனே தோட்டத்தில் ஜெபித்தார் என்று மத் 26:36, லூக் 22:44-ல் வாசிக்கிறோம்.

**மத் 26:36** அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே எனப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி. நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி . . . .

**லூக் 22:44** அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

ஆகிய வசனங்களில் தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாக ஜெபித்தார் என்று பார்க்கிறோம். இந்த சூழ்நிலையில் அவர் வியாகுலப்பட்டு, அதிகபாரத்தோடு ஜெபித்தார். அவருடைய வேர்வையெல்லாம் இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது என்று வாசிக்கிறோம். அப்படியாக அவர் சிலுவைக்கு போகும் முன்பு அதிக ஊக்கத்தோடு ஜெபித்தார் என்று பார்க்கிறோம். அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்தார்.

**எபி 5:7** அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

அப்படியாக அவர் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அதிக பாரத்தோடும், கண்ணீரோடும், பலத்த சத்தத்தோடும் ஜெபித்தார் என்று நாம் இந்த வேதபகுதிகளில் வாசிக்க முடியும். இயேசு சிலுவையில் பாடு அனுபவிக்கும் போதுகூட ஜெபம்பண்ணினார் என்று மத் 27:46-ல் வாசிக்கிறோம்.

இன்னொரு சமயத்தில் சீஷர்களை படகில் அனுப்பிவிட்டு தனியாக ஜெபம் செய்யும்படி மலையின்மேல் ஏறினார் என்று மாற் 6:46-48-ல் வாசிக்கலாம். (அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினார்.) இப்படி நீண்டநேரமாக ஜெபிக்கிற பழக்கம் இயேசுகிறிஸ்துவிடம் இருந்தது என்று அறிகிறோம். லாசருவை உயிரோடு எழுப்பினபோது இயேசு தேவனை ஸ்தோத்தரித்து ஜெபம் செய்தார். இதுபோல தம்முடைய சீஷர்களுக்காக தம்முடைய கண்களை வானத்திற்கு நேராக ஏறெடுத்து ஜெபித்தார்.

**யோவா 17:9** நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன், உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.

சீஷர்களை தீமையிலிருந்து காக்கும்படிக்கு தேவனை வேண்டிக் கொண்டார்.

**யோவா 17:15** நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த சீஷருடைய வார்த்தையினால் அவரை விசுவாசிக்கிற நமக்காககூட அவர் ஜெபித்தார்.

**யோவா 17:20** நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்

இப்படியாக இயேசுகிறிஸ்து முக்கியமான நேரங்களிலெல்லாம் பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபித்தார். சீஷர்களுக்காக ஜெபித்தார். அற்புதம் செய்கிற நேரங்களில் ஜெபித்தார். தேவனை மகிமைப்படுத்தும்படி ஜெபித்தார். நமக்காகவும் ஜெபித்தார். அவருடைய வாழ்க்கையே ஜெபமாகத்தான் இருந்தது. அதனால் தான் அவர் பிதாவின் சித்தத்தை அறியவும், நிறைவேற்றவும் முடிந்தது.

அவர் எருசலேம் தேவாலயத்திற்குள் சென்று பலிகள் செலுத்தப்படுவதற்கு பதிலாக வியாபாரங்கள் அங்கு நடப்பதை கண்டு பக்தி வைராக்கியத்துடன் என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று விற்கிறவர்களைக் கண்டித்தார். தேவாலயத்தை அவர் ஜெபவீடாகத்தான் கண்டார். அதைக் குறித்து பக்தி வைராக்கியமாய் இருந்தார். ஆகவே ஜெபத்திற்கு அவர் எவ்வளவு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தார் என்று இதிலிருந்து அறிய முடிகிறது.

நாமும்கூட இயேசுகிறிஸ்துவின் ஜெப வாழ்க்கையின் மாதிரியைக் கொண்டு நம்முடைய ஜெப வாழ்க்கையை மாற்றி அமைப்போமானால் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். அவரைப்போல தனியாகப் போய் ஜெபம் செய்வதற்கு இடத்தையும் நேரத்தையும் முன்குறித்துக்கொள்ள வேண்டும். அந்த நேரங்களில் தவறாமல் ஜெபிக்க வேண்டும். வாழ்க்கையின் முக்கியமான சம்பவங்களிலும், சோதனை நேரங்களிலும் தேவனிடத்தில் வழிநடத்துதல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளிலும் அவரைபோல நீண்ட நேரம் ஜெபித்தல்

வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் உபவாச ஜெபத்தை குறித்தும் நாம் கவனமாக இருப்பது நல்லது. உலக கவலைகளினாலும், பிரச்சனைகளினாலும் மாயையான இன்பங்களினாலும் பிசாசானவன் நமது ஜெப நேரத்தை தடைசெய்ய விடக்கூடாது. அப்படியாக நாம் தேவனோடு நெருங்கிய ஐக்கியம் வைத்துக்கொள்ளும்போது பிதாவாகிய தேவன் நம்மை தனியே இருக்க விடமாட்டார். அவருடைய வல்லமையினால் நாம் முற்றும் ஜெயம் கொள்கிறவர்களாக இருக்க முடியும். ஆகவே ஒவ்வொரு விசுவாசிகளுடைய ஜெபவாழ்க்கையும் இப்படி மறுரூபம் அடைய வேண்டும் என்பதே என்னுடைய வாஞ்சையாய் இருக்கிறது.

# 6. பரிசுத்த பவுலின் ஜெபம்

6-0 தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனத்திலிருந்து ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது போன்ற பக்தர்கள் தேசத்திற்காகவும் ஜனத்திற்காகவும் பரிந்துபேசி ஜெபிப்பதை நாம் பழைய ஏற்பாட்டில் பல பகுதிகளில் வாசிக்க முடியும். ஆனால் புதிய ஏற்பாட்டில் முக்கியமாக, இயேசு ஏறெடுக்கிறதான ஜெபங்களும், பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ஏறெடுக்கிறதான பரிந்து பேசும் ஜெபங்களும் நாம் வாசிக்க முடியும். இயேசுவுக்கு அடுத்தபடியாக பரிசுத்த பவுலின் ஜெபத்தைதான் நிருபங்களின் பலபகுதிகளில் நாம் வாசிக்கிறோம். பரிசுத்த பவுல் இயேசுவை ஏற்றுக் கொண்ட நேரத்திலிருந்தே ஜெபம் செய்ய ஆரம்பித்தார். பின்பு ஊழியத்திற்கு முழுமையாக தன்னை ஒப்புக்கொடுத்து சுவிசேஷத்தை பிரசங்கித்து சபைகளை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்தி வந்தார். அவருடைய மூன்று மிஷனரி பிரயாணங்களிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்து சபைகளை ஸ்திரப்படுத்தி வந்ததை வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் உள்ள பெரும்பாலான

நிருபங்கள் பரிசுத்த பவுல் அப்போஸ்தலனாலே எழுதப்பட்டவைகள் ஆகும். இந்த நிருபங்களிலெல்லாம் ஜெபத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் காண முடியும். பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் பெரிய ஜெபவீரனாக விளங்கினார் என்று இதன் மூலம் அறிந்துக் கொள்ளலாம். அவர் இடைவிடாமல் ஜெபித்தார், எப்பொழுதும் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார் என்று நாம் பல நிருபங்களில் வாசிக்கிறோம். மேலும் அவர் பல சபைகளுக்கு நிருபங்களை அனுப்பும் போதெல்லாம் விசுவாசிகளினுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், அவர்களுக்கு வேண்டிய ஆவிக்குரிய வரங்களுக்காகவும், அவர்கள் பக்திவிருத்தி அடைவதற்காகவும், அந்த சபைகள் ஸ்திரப்படுவதற்காகவும் ஜெபிப்பதாக நாம் வாசிக்க முடியும்.

**6-1 ரோமாபுரியின் சபைக்காய் ஜெபம்**

ரோமாபுரியில் இருக்கும் சபைக்காகவும் இதே நோக்கத்தோடு ஜெபித்தார். பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ஜெபம் பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் அந்த விசுவாசிகளுக்காக குறிப்பாக இந்த நோக்கத்திற்காகவே ஜெபித்தார் என்று ரோமர் 1:9,10-ல் வாசிக்கிறோம்.

**ரோமர் 1:9,10** நான் ஜெபம்பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதைக் குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்கு சாட்சியாயிருக்கிறார். நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்கு கொடுக்கும்படிக்குக்கும், . . . . . . . . வேண்டிக்கொள்ளுகிறேன்.

அந்த நாட்களில் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் நடுவே இருந்த சில தவறான மனப்பான்மைகளிலிருந்து அவர்களை விலக்கவும், அவருடைய பிரசங்கங்களைக் குறித்து உண்டானத்

தவறான செய்திகளை தெளிவுப்படுத்தவும் ரோம சபைக்காவும் அவர் இடைவிடாமல் ஜெபிப்பதாக குறிப்பிடுகிறார். அந்த சபையில் உள்ள விசுவாசிகள் ஸ்திரப்படுவதற்கு விசேஷித்த ஜெபம் தேவைப்படுவதை உணர்ந்த பவுல் இடைவிடாமல் ஜெபித்தார் என்று பார்க்கிறோம். இதுபோலவே மேலும் அந்த சபையில் உள்ள அவிசுவாசிகளுக்கு அவர் தப்பிக்கொள்ளும்படியாகவும் அவரோடு விசுவாசிகளும் போராடி ஜெபிக்க வேண்டும் என்று அவர் வேண்டிக் கொள்ளுகிறதையும் ரோம 15:30-32-ல் நாம் வாசிக்கிறோம். இடைவிடாமல் ஜெபிப்பது மட்டுமல்ல, போராடி ஜெபிக்கிற அனுபவமும் பரிசுத்த பவுல் அப்போஸ்தலனுக்கு இருந்தது.

பொதுவாக இயேசுவின் மூலம் கிடைக்கிறதான இரட்சிப்பைப் பிரசங்கிக்கிறதற்கு பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் மிகவும் வாஞ்சையுள்ளவராக இருந்தார். அதற்காக எந்த பாடுகளையும் சகிக்கவும் தன் ஜீவனையே சுவிசேஷத்திற்காக கொடுக்கவும் ஆயத்தமாக இருந்தார் என்று நிருபங்களிலிருந்து பார்க்கிறோம். இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய இருதயத்தின் விருப்பமாயிருந்தது என்று ரோம 10:1-ல் வாசிக்கிறோம். இதற்காகவே அவர் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்கிறவராக இருந்தார். இந்த வாஞ்சையை நிறைவேற்ற விண்ணப்பம் தேவை என்பதை பவுல் உணர்ந்தார். சொந்த ஞானத்தின்படி பிரசங்கிக்க வேண்டுமானால் பவுலுக்கு அது சாத்தியமானதுதான் ஆனால் அவர் தன்னுடைய ஞானத்தின்மேல் சார்ந்துக் கொள்ளாமல் பரிசுத்த ஆவியின் பெலத்தில் சார்ந்துதான் ஊழியம் செய்தார். அதற்காகவே விண்ணப்பித்தார் என்று பார்க்கிறோம். தேவனுக்கென்று ஊழியம் செய்வதற்கு அதிகமான ஜெபம் தேவை என்று நாம் உணர வேண்டும். இந்தக்காரியத்தில் பவுல் அப்போஸ்தலன் சிறந்த முன்மாதிரியாக இருந்தார்.

இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள அன்பின் மிகுதியினால், அவரால் நமக்கு கிடைத்த இரட்சிப்பின் மார்க்கத்தை விவரித்து பலதரப்பட்டதான மக்களும் இதை அறிந்துக் கொள்ளும்படியாக இந்த சபைக்கு எழுதினார். இந்த இரட்சிப்பு இஸ்ரவேலருக்கு மட்டுமல்லாமல் புறஜாதிகளாகிய நமக்கும் எப்படி ஆண்டவர் அருளுகிறார், அதை நாம் எப்படி விசுவாசத்தினாலே சுதந்தரித்துக் கொள்கிறோம் என்பதையெல்லாம் எழுதி அந்த சபைக்காகவும் இடைவிடாமல் ஜெபித்தார். இரட்சிப்பு நியாயப்பிரமாணத்தினால் அல்லாமல் விசுவாசத்தினாலே கிடைக்கிறது என்பதை அந்த சபையார் தெரிந்துக் கொள்ளும்படி விரும்பி, நமக்கு இருக்க வேண்டிய விசுவாசத்தைப் பற்றியும் எழுதினார். இப்படியாகத்தான் நாம் கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். என்று உணருகிறோம். இதில் ஆணித்தரமான உறுதி நமக்குத் தேவை.

1. நம்முடைய இரட்சிப்பை விசுவாசத்தினாலே பெற்று, விசுவாசத்திலே உறுதியாயிருப்போம்.

2. பாவத்தின் மேல் முழுமையாக வெற்றிப்பெற தொடர்ந்து ஜெபிப்போம். நமது ஜெப வாழ்வு மறுரூபமாகட்டும்.

## 6-2 கொரிந்து சபைக்கான ஜெபம்

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபைக்கு நிருபம் எழுதும்போது அங்கு ஒரு சில விசுவாசிகள் கூட்டம் தனக்கு விரோதமாக செயல்பட்டதைக் குறிப்பிட்டு எழுதுகிறதை பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கவும் நலமானதைச் செய்யும் பொருட்டும் பவுல் அவர்களுக்காகவும் பரிந்துபேசி விண்ணப்பம்பண்ணுவதாக 2 கொரி 13:7-ல் வாசிக்கிறோம்.

**2 கொரி 13:7** மேலும் நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக, தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறேன். நாங்கள் பரீட்சைக்கு நின்றவர்களென்று காணப்படும்பொருட்டல்ல, நாங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்கள் போலிருந்தாலும் நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம்பண்ணுகிறேன்.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் தனக்கு விரோதமாக இருக்கிறவர்களுக்காகவும் பரிந்துபேசி ஜெபிக்கிறவராக இருந்தார். கொரிந்து சபையிலே பாவம் செய்கிறவர்களும் காணப்பட்ட படியினாலே அப்படிப்பட்டவர்களுக்காகவும் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் விண்ணப்பம் பண்ண வேண்டியதாய் இருந்தது. இந்நாட்களில் சபைகளிலும்கூட இரட்சிக்கப்படாத ஜனங்களுக்காக பரிந்துபேசி ஜெபிக்கிற ஊழியர்களும், விசுவாசிகளும் தேவையாய் இருக்கிறது.

பல சபைகளுக்கு நிருபங்கள் எழுதி விசுவாசிகளை உற்சாகப்படுத்தின பவுல் அப்போஸ்தலன், கொரிந்தியருக்கும் எழுதி அவருக்காகவும் தீமோத்தேயுக்காகவும் விண்ணப்பம் பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறதை 2 கொரி 1:11-ல் வாசிக்கிறோம். அநேகர் மூலமாய் அவர்களுக்கு உண்டான தயவுக்காக தேவனை ஸ்தோத்திரம் பண்ணுவதோடு தங்களுக்காகவும் விண்ணப்பம் செய்யும்படி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறார். அந்த நாட்களில் கொரிந்து சபையிலே ஒரு சிலர் இவருடைய போதனையை ஏற்றுக் கொள்ளாதவர்களாக காணப்பட்டார்கள். இவரைப் பின் பற்றினவர்களைப் போலவே, இவர்களை ஏற்றுக் கொள்ளாதவருக்காகவும் அவர் விண்ணப்பம் செய்வதை இந்த நிருபத்தில் வாசிக்க முடியும். இவரைப் பின்பற்றாதவருக்கு தன்னுடைய நிலமையை அதிகமாக விளக்கிச் சொல்லுவதுடன், அவர்கள் பொல்லாங்கு செய்யாதிருக்கவும், நலமானதை செய்யும்

பொருட்டாகவும், அவர்களுக்காக பவுல் விண்ணப்பம் செய்வதை 2 கொரி 13:7-ல் வாசிக்கலாம். பவுல் அப்போஸ்தலன், அவர்கள் எல்லோரையும், இயேசுவின் அன்பினிமித்தம், அதிகமாக நேசித்ததினால், அப்படி ஜெபம் செய்ய முடிந்தது. நாமும் நம்முடைய ஜெப வாழ்க்கையில் மறுரூபமடைய வேண்டுமானால் இயேசுவின்மேலும் மற்ற பரிசுத்தவான்கள் மேலும் பவுலைப்போல அதிகமாக அன்பு செலுத்துகிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

கொரிந்து சபையைபோலவே இந்நாட்களிலும், இரட்சிக்கப்படாதவர்களும் ஊழியர்களுக்கு விரோதமாய் கிரியை செய்கிறவர்களும் சபைகளில் காண்கிறோம். ஆகவே நாமும் இவர்களுக்காக அதிகமாக ஜெபிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.

1. பவுல் அப்போஸ்தலனைப் போல இரட்சிக்கப்படாதவர் களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் பரிந்து பேசி ஜெபிக்கப் பழகுங்கள். அப்படி ஜெபித்தால் நமது ஜெப வாழ்வு மறுரூபமடைய முடியும்.

### 6-3 எபேசு சபைக்கான ஜெபம்

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் சபைகளுக்கு நிருபங்களை எழுதும் போதும், அந்த சபைகளுக்காக ஜெபிக்கும்போதும் சபையிலுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையை உன்னிப்பாய் கவனித்து குறிப்பாக ஜெபிக்கிறதை நாம் காணமுடியும். எபேசு சபையிலிருக்கும் பரிசுத்தவான்களுக்கு எழுதும்போது அந்த சபையிலுள்ள விசுவாசிகளுடைய விசுவாசத்தையும் பரிசுத்தவான்கள் எல்லோர்மேலுள்ள அன்பையும் குறித்து அவர்களுக்காக இடைவிடாமல் ஸ்தோத்திரம்பண்ணி தன்னுடைய ஜெபங்களில் இந்த சபையை நினைத்து ஜெபித்தார் என்று பார்க்கிறோம். அந்த சபையில் உள்ள விசுவாசிகள், அவர்களுடைய

நம்பிக்கை, அவர்களுக்கு உண்டாயிருக்கிற சுதந்திரம், தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமை ஆகிய இவைகளை அறிந்துக் கொள்ளும்படிக்கு, தேவன் அவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறதை எபே 1:15-19-ல் அறியலாம். ஆவிக்குரிய வாழ்க்கையில் முதிர்ச்சி அடைந்து வரும்போது ஆண்டவருடைய வல்லமை, மகத்துவம், மகிமை ஆகியவைகளை பற்றி ஆழமாக அறிந்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று உணர்ந்த பவுல் அப்போஸ்தலன், குறிப்பாக இவைகளுக்காக ஜெபிக்கிறார். ஜெபம் எல்லா சூழ்நிலைக்கும் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக ஏறெடுக்கப்படுகிற வேண்டுதல் அல்ல. மாறாக ஜெபம் அவரவருடைய ஆவிக்குரிய வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றபடி, குறிப்பாக ஏறெடுக்கப்படுகிற ஒன்றாக இருக்கிறது. இதை பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் விண்ணப்பத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியும். இப்படியாக பரிசுத்த ஆவியினாலே உள்ளான மனுஷனில் விசுவாசிகள் வல்லமையாய் பலப்படவும், கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களில் வாசமாயிருக்கவும், எபேசு சபையாருக்காக பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் முழங்கால்படியிட்டு வேண்டிக் கொள்ளுகிறேன் என்று எபே 3:14-20 வரை உள்ள வசனங்களில் குறிப்பிடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய அன்பை அறிந்துக் கொள்ள வல்லவர்களாகவும், சகல பரிபூரணத்தில் நிறையப்படவும், தேவன் அவர்களுக்கு அனுகிரகம் பண்ண வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளுகிறார். உள்ளான மனுஷனில் பலப்படுவதும், பரிபூரணத்தால் நிறையப்படுவதும், வளர்ந்து வருகிற ஒவ்வொரு விசுவாசிக்கும் அவசியம் தேவையாய் இருக்கிறது, என்பதை உணர்ந்து, பவுல் ஜெபிக்கிறார் என்று பார்க்கிறோம். ஜெபத்தின் முடிவிலே நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்ளுகிறதற்கும்

மிகவும் அதிகமாய் தேவன் நமக்குள்ளே கிரியை நடப்பிக்க வல்லவராய் இருக்கிறார் என்கிற விசுவாசம் நமக்குத் தேவை என்பதை, நாம் உணர வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசத்தோடு ஏறெடுக்கப்படுகிறதான ஜெபத்திற்கு பதில் உண்டு என்பதை நாம் அறியலாம். இப்படியாக பரிசுத்த பவுல் அப்போஸ்தலனுடைய ஜெபங்களெல்லாம் ஆவிக்குரியவைகளாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையின் பரிபூரணத்திற்காகவும், அவைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்கிற விசுவாசம் பொருந்தினவைகளாகவும், இருப்பதையும் நாம் பார்க்கிறோம். பரிசுத்த பவுல் அப்போஸ்தலரின் ஜெபங்கள் விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் முன்மாதிரியாக இருக்கிறது என்பதை இந்த நிருபங்கலிலிருந்து நாம் அறிந்துக் கொள்ளுகிறோம். மேலும் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எல்லா காரியங்களுக்காகவும் எந்த சமயத்திலும் மனஉறுதியோடு விண்ணப்பம் பண்ணுகிறவராக இருந்திருக்கிறார் என்று அவர் எபேசு சபைக்கு கொடுக்கும் ஆலோசனையிலிருந்து அறிந்துக் கொள்ள முடியும். ஆவியினாலே ஜெபம் செய்வதும், மனஉறுதியுடன் ஜெபம் செய்வதும், ஜெப வாழ்க்கையில் வளர்ந்த விசுவாசிகள் செய்ய கூடியவைகளாக இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் இந்த அனுபவத்திற்குள் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். சகல பரிசுத்தவான்களுக்காகவும் நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நமக்கு உண்மையான வாஞ்சை இருக்குமானால் பரிசுத்த ஆவியானவர் நாம் அப்படி ஜெபிப்பதற்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். இதுமட்டுமல்ல, நாம் ஊழியர்களுக்காகவும், கடினமான பகுதியில் சுவிசேஷ ஊழியம் செய்யும் மிஷனரிகளுக்காகவும், ஜெபிப்பது எவ்வளவு அவசியம் என்று பவுல் அப்போஸ் தலனுடைய அனுபவத்திலிருந்து நாம் அறிய முடியும். சுவிசேஷத்தை அறிவிக்கிறதற்கு எனக்கு வாக்குக்கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள் என்று பரிசுத்த பவுல் எபேசு சபை விசுவாசிகளைக்

கேட்டுக் கொள்ளுகிறார். இவைகளை எபே 6:18-20 வரை உள்ள வசனங்களில் வாசிக்கலாம். சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கு விசுவாசிகளின் ஜெபம் தேவையாய் இருக்கிறது. பிரசித்தி பெற்ற பவுல் அப்போஸ்தலனே இந்த தேவையை உணருவாரானால் இந்த நாட்களில் ஊழியம் செய்யும் ஊழியருக்கும் சுவிசேஷருக்கும் நம்முடைய ஜெபம் அதிக தேவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

1. ஆவிக்குரிய காரியங்களை அறிந்துக் கொள்ள பிரகாசமுள்ள மனக் கண்களை தேவன் கொடுக்க ஜெபியுங்கள்.

2. உள்ளான மனுஷனில் பெலப்படவும் பரிபூரணத்தால் நிறையப்படவும் வாஞ்சையுள்ளவர்களாய் நாம் ஜெபிக்க வேண்டும்.

3. ஆவியினாலே ஜெபம் செய்வதற்கும் மனஉறுதியுடன் ஜெபிக்கும் அனுபவம் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள். பரிசுத்த ஆவியானவர் உதவி செய்வார்.

4. சபை போதகர்களுக்காகவும், சுவிசேஷம் அறிவிக்கிறவர்களுக்காகவும் நமது ஜெபம் தேவை என்பதை அறிந்து ஜெபியுங்கள்.

5. நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார் என்று விசுவாசித்து ஜெபியுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமடைவதைக் காண முடியும்.

## 6-4 பிலிப்பி சபைக்கான ஜெபம்

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ரோமர் சபை, தெசலோனிக்கேயா சபை, கொலோசெ சபை, கொரிந்து சபை, எபேசு ஆகிய சபைகளுக்கு எழுதுவதுபோல பிலிப்பி பட்டணத்தில் உள்ள சபைக்கும் நிருபம் எழுதினார். இந்த சபையில் உள்ள

பரிசுத்தவான்களுக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் குறிப்பாக எழுதுவதைப் பார்க்கிறோம். அவர்களெல்லாருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணிக் கொண்டு இருந்தார். விண்ணப்பம் பண்ணுவது மாத்திரமல்ல அவர்களை நினைக்கும்போதெல்லாம் தேவனை ஸ்தோத்திரம் செய்துக் கொண்டு இருந்தார். அவர்களை தன்னுடைய இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறதாகவும், இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள அன்பினாலே எல்லோர்மேலும் வாஞ்சை உள்ளவராய் இருந்தார் என்று பிலி 1:4-11 வரை உள்ள பகுதியில் அவர் எழுதுகிறதை வாசிக்கிறோம். இதிலிருந்து ஜெப வாழ்க்கையில் பரிசுத்த பவுல் ஒரு உச்சக்கட்டதை அடைந்திருப்பதை காணமுடியும். அவர் விண்ணப்பம் செய்ததின் நோக்கம், பிலிப்பி பட்டணத்தில் உள்ள விசுவாசிகள் தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி, நீதியின் கனிகளால் நிறைந்திருக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாய் இருக்க வேண்டும் என்பதுமேயாகும். கிறிஸ்து எப்படியாகிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவருடைய வாஞ்சை. அவர் பிரசங்கிக்கிறதை குறித்து அவர் மிகுந்த சந்தோஷம் அடைந்ததாக பிலி 1:10-ல் வாசிக்கலாம். பவுல் அப்போஸ்தலனின் ஜெபங்கள் எல்லாம் விசுவாசிகளினுடைய ஆவிக்குரிய வளர்ச்சியையும் பரிசுத்தத்தையும் பற்றியதாகவே இருந்தது. இதிலிருந்து இவைகளின் முக்கியத்துவம் எவ்வளவு அதிகம் என்று அறிந்துக்கொள்ள முடியும். அறிந்துக்கொள்வது மட்டுமல்லாமல், பவுலின் முன்மாதிரியான ஜெபங்களை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே பரிசுத்த ஆவியானவர் நமக்கு இவைகளைத் தெரியப்படுத்தி இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள அன்பும், மற்றும் அங்குள்ள பரிசுத்தவான்கள், கண்காணிகள், உதவிக்காரர்கள் மேலும், பவுல் காட்டினதான

பெரிதான அன்பு, நம் ஒவ்வொருவருக்கும் தேவை. இந்த முன்மாதிரியை நாம் பின்பற்றும் போது, நமது சபையில் உள்ள விசுவாசிகளும், ஊழியர்களும் பொதுவாக அவர்களுடைய ஜெப வாழ்விலும், ஆவிக்குரிய வாழ்விலும் மறுரூபமாக முடியும் என்பதில் சந்தேகமில்லை.

1. சபை மக்களுக்காகவும், ஊழியம் செய்யும் ஊழியர்கள், கண்காணிகள் மற்றும் உதவிக்காரர்களுக்காகவும் பரிந்து பேசி ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

2. நீங்கள் நீதியின் கனிகளில் நிறைந்தவர்களாய் கடைசி நாளுக்கென்று இடறல் அற்றவர்களும் துப்புரவானவர்களுமாய் நம்மைக் காத்துக் கொள்ளும்படியாகவும் பவுல் அப்போஸ்தலனின் முன்மாதிரிகளை பின்பற்றி ஜெபியுங்கள். உங்கள் ஜெப வாழ்வு மறுரூபமாகட்டும்.

## 6-5 கொலோசெயர் சபைக்காய் ஜெபம்

ரோமாபுரி சபைக்குபோலவே கொலோசெ சபையில் உள்ள விசுவாசிகளுக்கு அவர்களுடைய விசுவாசத்தையும், எல்லா பரிசுத்தவான்கள் மேலுள்ள அவர்கள் அன்பைக் குறித்து, பாராட்டி எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறதாக கொலோ 1:3-5-ல் வாசிக்கிறோம். இந்த சபையில் உள்ள பரிசுத்தவான்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்காக ஸ்தோத்திரத்தோடுக்கூட வேண்டுதல் செய்பவராக பவுல் இருக்கிறதை பார்க்கிறோம். அந்த சபையில் உள்ள விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கேட்டபோது அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணினார். அந்த சபையார் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படவும், தேவனை அறிகிற அறிவில் விருத்தி அடையவும், நற்கிரியைகளாகிய கனிகளைத் தந்து,

தேவனுடைய வல்லமையின்படி பலப்படுத்தப்படவும் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறதை கொலோ 1:9-12 வசனங்களில் வாசித்து அறிந்துக் கொள்ளலாம். சபைகளை உற்சாகப்படுத்துவதற்கும், ஸ்திரப்படுத்துவதற்கும் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் இடைவிடாமல் விண்ணப்பம் பண்ணினார் என்று இந்த பகுதியிலிருந்து அறிகிறோம்.

கொலோசே பட்டணத்தில் உள்ள விசுவாசிகளுக்காகவும் பரிசுத்தவான்களுக்காகவும் சந்தோஷப்பட்டு, பரிசுத்த பவுல் அடிக்கடி தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்வதோடு, அவர்களுக்காக ஜெபிக்கிறவராகவும் இருந்தார். அந்த சபையார் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்தவர்களாயிருந்தார்கள். எனினும் அவர்களைக் குறிப்பாக நயவசனிப்பினாலே ஒருவனும் வஞ்சியாதபடிக்கும், உலக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் அவர்களைக் கொள்ளைக் கொண்டு போகாதபடிக்கும் எச்சரிக்கிறதை கொலோசேயருக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம். சர்ப்பத்தைப் போல மாயமான தந்திரத்தினாலாகிய துர் உபதேசங்கள் சபையில் புகுந்திருந்தது. இப்படிப்பட்ட கள்ள உபதேசங்கள் இருந்தபடியினாலே விசுவாசிகள் கிறிஸ்துவினுடைய விசுவாசத்திலே பூரண நிச்சயம் உடையவர்களாக நிலைநிற்க வேண்டியது அவசியமாகக் கண்டது. போஜனத்தைக் குறித்தும், நாட்களைக் குறித்தும் குற்றம் சொல்லுகிற கூட்டம் அந்த காலத்தில் போலவே தற்காலத்திலும் கூட சபைகளில் உண்டு. அவர்கள் மாமிசம் சாப்பிடுகிறவர்கள் பரலோக ராஜ்யம் போகமாட்டார்கள் என்று தவறாக உபதேசிக்கிறார்கள். பத்திரிகைகளிலும் எழுதி பிரசுரிக்கிறார்கள். மாமிசம் புசிக்கிறதும், புசியாமலிருக்கிறதும் முக்கியமல்ல. இவைகளில் கிறிஸ்துவைப் பற்றி ஏதாவது உண்டானால் தான் அதை எடுத்துக் கொள்ளலாம். அதுபோல சில குறிப்பிட்ட நாட்களை விசேஷித்துக் கொண்டு அதன்படி

மற்றவர்களை குற்றப்படுத்துகிறவர்களும் உண்டு. அது தவறு, எதைச் செய்தாலும் அதை தேவனுக்கென்று செய்யும்படியாகத் தான் வேதத்தில் பார்க்கிறோம். கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு அவரில் உறுதியாய் இருக்க வேண்டுமே தவிர, உலக ஞானத்தைச் சார்ந்தும் தேவ தூதர்களுக்கு செய்யும் ஆராதனைகளைப் பற்றிக் கொண்டும், மற்ற எந்த தந்திரமான உபதேசங்களின் பின்னும் ஓடிவிடாதபடி எச்சரிக்கையாக இருக்கும்படி பரிசுத்த பவுல் விரும்புகிறார். பந்தயப் பொருளை இழந்துவிடாதபடி, பூரண நிச்சயத்தோடு நிலைத்திருக்கிற நல்ல விசுவாசிகளாக இருப்போம். இதற்காக குறிப்பாக போராடி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இப்படி ஜெபித்தால் சபைக்குள் எழுப்புதலும், நமக்கு உயிர்மீட்சியும் வந்து விடும். கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாகவும் நிலைத்து இருக்கிறவர்களாகவும் நாம் மாறுவோம். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் நாம் இரட்சிப்படைவதற்கு, ஞானம் அறிவு எல்லாம் அடங்கி இருக்கிறது. வேறு உபதேசங்கள் தேவையில்லை. இதற்காகவே சபை ஜெபிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட ஜெபம் நம்மை மறுரூபமடையச் செய்யும் என்பது உறுதி.

1. தந்திரமானதும் மாயையானதுமான துர் உபதேசங்களுக்கு இடம் கொடுக்காதிருங்கள். நாட்கள் பார்ப்பதை விட்டு விடுங்கள்.

2. கிறிஸ்துவுக்குள் பூரண நிச்சயத்துடன் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருங்கள்.

3. இவைகளுக்காக போராடி ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பதைக் காணமுடியும்.

## 6-6 தெசலோனிகேயா சபைக்கான ஜெபம்

இதுபோலவே தெசலோனிக்கேயர் சபைக்குக்கூட அங்குள்ள பரிசுத்தவான்களின் விசுவாசத்தின் கிரியைகளையும், அன்பின்

பிரயாசத்தையும், இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையின் பொறுமையையும் மெச்சிக்கொண்டு (பாராட்டி) தேவனுக்கு முன்பாக நினைவுக்கூர்ந்து அவர்களுக்காக இடைவிடாமல் விண்ணம்பம்பண்ணி தேவனை ஸ்தோத்தரிக்கிறதை 1 தெசலோ 1:2-4 வரைக்கும் உள்ள வசனங்களில் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். சபையில் உள்ள விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை உன்னித்துப் பார்த்து, அவைகள் ஒவ்வொன்றுக்காகவும் விசுவாசிகளைப் பாராட்டுவதும், தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்வதும், இடைவிடாமல் விண்ணப்பம் செய்வதும், பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் முன்மாதிரியான ஜெபவாழ்க்கையைக் குறிக்கிறது.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரியில் உள்ள சபைக்கும் மற்றும் தெசலோனிகேயா, கொலோசெ ஆகிய சபைகளுக்காக ஜெபிக்கிறது மாத்திரமல்ல, அங்குள்ள விசுவாசிகள் பரிசுத்த பவுலின் ஊழியத்திற்காக ஜெபிக்கும்படி அவர்களை வேண்டிக் கொள்ளுகிறதையும் 1 தெசலோ 5:25-ல் வாசிக்கிறோம். மேலும், தனக்காக வேண்டிக்கொள்ளும்படி கொலோ 4:3,4-லும், தெச 3:2-லும் வேண்டிக் கொள்ளுகிறார். அவர் சபைக்கு ஜெபிப்பது மாத்திரமல்ல, மற்றவர்கள் அவருக்காக ஜெபிக்கிற ஜெபமும், பயனுள்ளதாக இருக்கிறது என்பதை நாம் இதிலிருந்து அறிய முடியும். அதுபோலவேதான் நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கடமைபட்டிருக்கிறோம். ஊழியர்களை விசுவாசிகள் ஜெபத்தில் தாங்குவதும், சபைக்காக ஊழியர்கள் ஜெபிப்பதும் தேவையாய் இருக்கிறது என்று பரிசுத்த பவுலின் ஜெப வாழ்க்கையிலிருந்து நாம் அறிய முடியும்.

பரிசுத்த பவுல் தெசலோனிக்கே சபைக்கு இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள் ஒருவனும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.

எப்பொழுதும் நன்மை செய்யுங்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இப்படிச் செய்வதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்று எழுதுவதை 1 தெச 5:15-18 வசனங்களில் பார்க்கிறோம். நாம் இந்தக் காரியங்களில் தேறினவர்களாக இருக்க வேண்டும். இதுதான் நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவர் நம்மில் அற்புதம் செய்வார். இதற்காகத் தான் நாம் தேவனுடைய வல்லமையான மகிமையின்படியே பெலப்படுத்தப்பட வேண்டும். மகிமையின் வல்லமை உங்களுக்கு இந்தக் கிருபைகளைத் தரும். எத்தியோப்பியன், தன் தோலையும் ஒட்டகச்சிவிங்கி தன் புள்ளியையும் எப்படி மாற்ற முடியாதோ, அப்படியே தீமை செய்யப் பழகினவர்கள் நன்மை செய்வது முடியாதது போல் தெரிந்தாலும், நாம் நன்மை செய்ய முயற்சிக்க வேண்டும். அதுதான் ஆண்டவருக்கு நம்மைப் பற்றிய அவருடைய சித்தம். நம்முடைய சக்தியினால் இது முடியாமல் இருக்கலாம். அதற்குத்தான் உயிர்த்தெழுதலின் வல்லமை சபைக்குத் தேவை. இந்தக் கிருபையை ஆண்டவர் நமக்குக் கொடுப்பார். நாம் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாக மாறவேண்டும்.

நாம் இதற்காக ஜெபித்தால் தேவன் இந்த அனுபவத்தைக் கொடுப்பார். நாம் உலக காரியங்களைக் கேட்காமல் நித்தியத்திற்கடுத்த காரியங்களை ஜெபத்திலே கேட்கும்போது தேவன் அவைகளை நிச்சயமாக நமக்குத் தருவார். தேறினவர்களாக மாறுவது மட்டுமல்ல, எல்லாவித நிச்சயத்தோடும் நிலைநிற்க வேண்டும் என்று பரிசுத்த பவுல் ஜெபித்தார். தேவசித்தத்தை அறிகிறதில் சந்தேகம் இருக்கக் கூடாது. திட்டவட்டமாக தேவனுடைய சித்தத்தை அறிந்து அதில் நிலை நிற்கிறவர்களாக மாறவேண்டும். இப்படியாக பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் குறிப்பாக சபைகளுக்காக ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம்.

1. நம்மைப் பற்றி தேவனுடைய சித்தத்தை திட்டமாய் அறிகிறோமா?

2. அதை அறிந்த பின் அதில் நிலை நிற்கிறோமோ என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும்.

3. இந்தவிதமான நித்தியத்துக்கடுத்தக் காரியங்களுக்காக நாம் இடைவிடாமல் ஜெபித்தால் நமது ஜெப வாழ்வு மறுரூபப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

## 6-7 தீமோத்தேயுவுக்கான ஜெபம்

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் பல சபைகளுக்கு நிருபங்களை அனுப்பினது மட்டுமல்லாமல் அவரே சீஷனாக உருவாக்கிய தீமோத்தேயுக்காகவும் ஜெபிக்கிறதை 2 தீமோ 1:3-ல் எழுதி உற்சாகப்படுத்துவதை நாம் வாசிக்கிறோம். அவர் உருவாக்கிய சீஷனாகிய தீமோத்தேயுவை, தகப்பன் தன் குமாரனை நேசிப்பதுபோல நேசித்தார் என்று வாசிக்கிறோம். ஆகவே தீமோத்தேயுக்காக இரவும் பகலும் இடைவிடாமல் அவருடைய ஜெபங்களில் அவனை நினைத்து அவனுக்காக சந்தோஷப்பட்டார். அவனுடைய விசுவாசத்தை பாராட்டி அவனுக்குண்டான தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடும்படி அவனை உற்சாகப்படுத்தினார். இந்த நிருபத்தில் தீமோத்தேயுக்காக இடைவிடாமல் பவுல் அப்போஸ்தலன் ஜெபம் செய்தார் என்று வாசிக்கிறோம். இதுவும் அவருடைய ஜெப வாழ்க்கையின் தரத்தை சுட்டிக்காட்டக் கூடியதாகவே இருக்கிறது. இப்படியாக பரிசுத்த பவுல் நமக்கு முன்மாதிரியான ஜெப வாழ்க்கையை இதிலும் காட்டியிருக்கிறார். பரிசுத்த ஆவியின் பெலத்தினால் நாமும் அந்த பாதையில் சென்று நம்முடைய ஜெபவாழ்க்கை மறுரூபமடைய தேவன் உதவி செய்வாராக.

1. தீமோத்தேயுவைப்போல, விசுவாசிகள் ,வரம் பெற்றவர்களாக இருக்கவும், வரம் பெற்றவர்கள் தங்கள் வரங்களை, தேவநாமம் மகிமைக்கென்று பரிசுத்த ஆவியினால் அனல் மூட்டி எழுப்பவும் ஜெபியுங்கள்.

2. ஒவ்வொரு விசுவாசியும், இன்னும் ஒருவரை இயேசுவின் சீஷனாக உருவாக்கும்படி பிரயாசப்படுவதுடன் அவருக்காக தொடர்ந்து ஜெபிக்கும் அனுபவம் உங்கள் ஜெப வாழ்வை மறுரூபமடையச் செய்யும்.

## 6-8 பிலேமோனுக்கான ஜெபம்

பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் உடன் வேலையாளாகிய பிலேமோனுக்காக, ஜெபிக்கிறதை பிலேமோனுக்கு எழுதின நிருபத்தில் நாம் வாசிக்க முடியும். இந்த நிருபத்தில் பிலேமோனை பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் அவருடைய ஜெபங்களில் நினைத்து, எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்தார். பிலேமோன் இயேசுவினிடத்திலும், மற்ற பரிசுத்தவான் களிடத்திலும் காட்டிய அன்பைப் பாராட்டி தேவனை ஸ்தோத்திரம் செய்தார். மேலும் பிலேமோனிடத்தில் காணப்பட்ட விசுவாசமும், பரிசுத்தவான்களிடத்திலே அவருடைய அந்நியோநியமும் கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் வேண்டுதல் செய்தார். இப்படியாக பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் பல சபைகளுக்காக ஜெபித்தது மட்டுமல்லாமல், தீத்து, பிலேமோன் ஆகிய உடன் வேலையாட்களுக்காகவும் தேவனுடைய சமுகத்திலே ஜெபிப்பதையும், இப்படியாக நல்ல ஜெபவீரனாக விளங்கினார் என்று பார்க்கிறோம். (பிலே 1:4-6)

**1. பவுல் சபைக்காய் ஜெபித்த ஜெபத்தை மாதிரியாய் வைத்து சபைக்காய் ஜெபியுங்கள்.**

2. சபைக்காய் ஜெபிக்க பரிசுத்த ஆவியானவர் கிருபை கொடுக்க ஜெபியுங்கள்.

3. தேவன் நம்முடைய மனக் கண்களை திறக்க ஜெபியுங்கள். நமது ஜெப வாழ்வு மறுரூபமடையவும் ஜெபியுங்கள்.

4. சபைக்காய் ஜெபிக்க பரிசுத்த ஆவியானவரின் ஞானம் கொடுக்கப்பட ஜெபியுங்கள்.

5. தனிப்பட்ட சில நபர்களை நீங்கள் சீஷராக்கி அவர்களுக்காக ஜெபியுங்கள்.

# 7. ஜெபபாரம்

7-1 தேவன் தாம் செய்ய விரும்பும் காரியங்களைச் செய்ய, தன் இருதயத்திற்கு ஏற்ற மனிதனைத் தேடுகிறார். அப்படிப்பட்ட மனிதனுக்கு தனக்கு சித்தமானவைகளைச் செய்ய தரிசனங்களைக் கொடுக்கிறார். காரியங்களை வெளிப்படுத்துகிறார். அப்பொழுது அந்த வெளிப்பாடு அவனுக்கு பாரமாக மாறுகிறது. அந்த பாரம் சரியானபடி செயல்பட தேவனோடு நல்ல ஐக்கியம், கீழ்படிதல் போன்றவைகள் தேவையாயிருக்கிறது. பரிசுத்த பவுல், அப் 9:1-ல் எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது என்று இஸ்ரவேலரைக் குறித்த பாரத்தைப் பற்றி கூறுகிறார். ரோம 10:1-ல் இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது என்றார். லூக் 22:41-45 வரை இயேசு எவ்வளவாய் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை

இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது என்று வாசிக்கிறோம்.

7-2 எஸ்றா வை எடுத்துக் கொண்டால் அவன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும், அதை உபதேசிக்கவும் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் என்று வாசிக்கிறோம். பரிசுத்த வித்து தேவ ஜனங்களோடு கலந்துவிட்டது என்கிற மாத்திரத்தில் அவன் தன் வஸ்திரத்தையும், சால்வையையும் கிழித்து, தன் தலையிலும் தன் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கி, திகைத்தவனாய் காலை முதல் அந்திப்பலி செலுத்தும் நேரம் வரை அதாவது மாலை வரை உட்கார்ந்திருந்தான். தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குகிற யாவரும் அவனோடு கூடிக் கொண்டார்கள். பின்னர், முழங்காற்படியிட்டு கைகளை தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து, எங்கள் அக்கிரமங்களும், குற்றங்களும் தலைக்கு மேலாகப் பெருகிற்று என்றும், வெட்கிக் கலங்குகிறோம் என்றும் ஜெபித்தான். அப்படிப்பட்ட ஜெபஆவி நம்மைப் பற்றிப் பிடிக்க வேண்டும். தேவனுக்கென்று வைராக்கியமாய் வாழ, பரிசுத்த ஜாதியாய் பிரித்தெடுக்கப்பட எஸ்றா வைப்போன்ற பாரம் நம்மை ஜெபிக்க வைக்க வேண்டும். நம் ஜெப வாழ்க்கையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஜெபத்திலே எதற்கு துக்கம்? எதற்கு கண்ணீர்?

7-3 நெகே 1:1-4-ல் நெகேமியா எருசலேமின் அலங்கம் இடிபட்டதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது என்ற வார்த்தைகளைக் கேட்டான். அவனில் உண்டான காரியம் என்ன? அவன் உட்கார்ந்து, அழுது, சில நாளாய் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தான். அற்ப காரியங்களுக்காக துக்கப்படுகிற ஆட்கள் இன்றைக்கும் நம்மிடம் உண்டு. வேதம் சொல்லுகிறது, உன் அலங்கத்துக்குள்ளே சமாதானம் இருக்க வேண்டும். உன் அலங்கத்திற்குள் புருஷனும்,

மனைவியும் நெடுநாள் சண்டையிட்டு, நெடுநாள் யுத்தம் நடக்கிறது. சமாதானம் இல்லை. சபையில் அலங்கம் இடிந்து கிடக்கிறது. சத்துரு உள்ளே புகும்படியாய் கோட்டையும் எல்லைகளும் தகர்ந்து இருக்கின்றன. துதியில்லை. இவற்றை சீர்ப்படுத்த நெகேமியாவின் துக்கமும், ஜெப ஆவியும் தேவை. ராஜாவின் அரண்மனையில் நெகேமியாவுக்கு நல்ல ராஜபோஜனம் உண்டு. அவன் பானபாத்திரக்காரனாயிருந்தான். இவன் ருசிபார்த்த பின்புதான், ராஜா அருந்துவார். அவன் ஒரு அரண்மனை வாசி. ஆனால், அவனுக்கு துக்கம் உண்டாயிற்று. என்ன துக்கம்? எருசலேம் அலங்கம் இடிபட்டுக்கிடக்கிறது, என் ஜனங்கள் நிந்தைக்குள் இருக்கிறார்கள், அது கட்டப்பட வேண்டும் என்கிற துக்கம், பாரம் வருகிறது. தேவனுடைய ராஜ்யம் கட்டப்பட வேண்டும் என்கிற கண்ணீரோடு ஜெபிக்கும் ஆவி நமக்குள் வர வேண்டும்.

7-4 தானியேல் எப்படி ஜெபித்தான் என்பதை தானி 9:2-ல் காண்கிறோம். எருசலேமின் பாழ்க்கடிப்புக்கள் தீர எழுபது ஆண்டுகள் ஆகும் என்று எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் மூலம் தெரிந்து கொண்டான். பின்னர் உபவாசம்பண்ணி, இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து தேவனை ஜெபத்தினாலும், விண்ணப்பத்தினாலும் தேட தன் முகத்தை அவருக்கு நேராக்கினான் என்று வாசிக்க முடியும். தானியேல் எவ்வளவு பொறுப்போடு வேலைபார்க்கும் நிலையிலும் ஜெப நேரத்தை சரியாய் உபயோகித்தான். அதனால் அவன் எதையும் இழக்கவில்லை. தானி 9:23-ல் தேவதூதனாகிய காபிரியேல் அவனிடம் பேசுவதைக் காண்கிறோம். தானி 10:13-ல் மிகாவேல் என்னும் தூதன் உதவிக்கு வந்ததாக வாசிக்கிறோம். தானியேல் புசிக்காமல் இருந்தான். இறைச்சி, திராட்சரசம் அவன் வாய்க்குள் போகவில்லை, பரிமளதைலம் பூசிக்கொள்ளவில்லை என்று

கூறுகிறார். அவருடைய பாரத்துக்கு ஏற்றவாறு தூதர்கள் பதிலைக் கொண்டு வந்தனர். ஆகவே ஜெப நேரத்தை நாம் சரியாய் காக்க வேண்டும். சத்துரு பலவிதமான சோதனைகளைக் கொண்டு வந்து, பாரத்தோடு தேவசமூகத்தில் காத்திருக்க தடை செய்வான். நாம் உறுதியான தீர்மானத்தோடு அதாவது விழிப்போடு காணப்பட்டால் தான், பாரத்தோடு ஜெபிக்கும் ஜெபவீரர்களாய் வளர முடியும்.

நல்ல தீர்மானம் எடுத்து வேதத்தை வாசிப்பது மட்டுமல்ல, அதை வைத்து ஜெபிக்கிற ஆவி நமக்குள் வரவேண்டும். வேதத்தை வாசித்து அறிந்து கொள்ள ஆவியானவர் உதவி செய்ய இருக்கிறார். உன்னை இரட்சித்து அபிஷேகித்து இருக்கிறார். தேசத்துக்காகவும், சபைக்காகவும் அழுது ஜெபிக்கிற ஆட்கள் தேவை. ஆண்டவர் உங்களுக்கு வேதத்தின் இரகசியங்களை விளக்கிக் கொடுக்க, கொடுக்க தேவசமூகத்தில் ஜெபியுங்கள். என் வீட்டில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் வரவேண்டும் என்று ஜெபியுங்கள். உம்மைப்போல் ஜெபிக்கிற ஆவியைத்தாரும் ஐயா என்று ஜெபியுங்கள். ஆண்டவருக்கே ஒரு ஜெபஆவி தேவைப்பட்டால் நமக்கு எவ்வளவு அதிகம் தேவை!

7-5 வேதாகமத்தில் அன்னாளைப் பற்றி வாசிக்கும் போது, பாரத்தோடு ஜெபித்து, நல்ல பதிலைப் பெற்றுக் கொண்ட பெண்ணாக அவளைக் காண்கிறோம். கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்த காலம் அது. மேலும் அது தரிசனம் இல்லாத காலம். ஆனால் அன்னாள் சகல இஸ்ரவேலருக்கும் நல்ல சாமுவேல் தீர்க்கதரிசியைப் பெற்றெடுத்துக் கொடுத்தாள். இதன் இரகசியமென்ன? அவள் ஜெபிக்கும்போது அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. சத்தம் கேட்கப்படவில்லை. தன் இருதயத்தில் பேசினாள். சீலோவாவில் மற்றவர்கள் புசித்துக் குடித்தார்கள். அன்னாளோ எழுந்து ஆலயத்திற்குள் சென்று,

மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். அவள் சஞ்சலம் நிறைந்த ஸ்திரீ, மனக்கிலேசம் நிறைந்த ஸ்திரீ. அவளுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. வேதத்தில், கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அவளிடத்தில் விசுவாசம் காணப்பட்டது. கர்த்தருடைய சமூகத்தில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணிய பின், கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றிய பின் விசாரத்தோடு வந்த அவள், புறப்பட்டுப்போய் போஜனம் பண்ணினாள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார் என்ற விசுவாசம் வந்தது. அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை என்று வேதம் சொல்லுகிறது. இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன?

நாம் பாரமற்றவர்களாய் காணப்பட வேண்டிய அவசியமென்ன? இந்த பாரமற்ற நிலைக்கு சில காரணங்கள் உண்டு. பிரச்சனைகள் உண்டு. ஆனால் அப்பிரச்சனைகளை தேவ சமூகத்திற்கு எடுத்துச் செல்லாத நிர்விசாரம், நாம் தேவசமூகத்தில் செலவு செய்யவேண்டிய நேரத்தை டி.வி முன் கழிப்பது, சாதாரண காரணங்களாகும். தேவனோடு எவ்வளவு அதிக நேரம் செலவழிக்கிறோமோ அவ்வளவுக்கு பாரத்தை விரிவாக்குவார். தேவன் தேவையை சந்திப்பார் என்னும் விசுவாசம் மிக தேவையானது. எபி 3:12 ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் நமக்குள் காணப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ஜெபபாரம் பெற்றுக்கொள்ளாத நிலைக்கு மற்றொரு காரணம் அதிக வேலைப்பளு. ஆகவே குறைந்த நேரத்தை ஜெபத்தில் செலவழிக்கிறோம். தூக்க மயக்கத்தோடு ஜெபிக்கிறோம். இந்த மாதிரி ஜெபத்தில் பயனில்லை. தேவனோடு செலவு செய்யும் நேரத்தை சரியாய் செலவிட வேண்டும். அப்போதுதான் தேவன் இடைபடுவார். தமது

காரியங்களை வெளிப்படுத்துவார். தமது பாரத்தை நமக்குத் தெரியப்படுத்துவார்.

## 7-6 ஸ்தல சபையின் ஜெபம்

தனி ஜெப வாழ்க்கையை உறுதிப்படுத்தி மறுரூபமான விசுவாசிகளே ஸ்தல சபையை மறுரூபப்படுத்த முடியும். ஸ்தல சபையும் ஜெபத்தில் தான் உருவாக வேண்டும். சிலர் கூடி ஜெபிக்க வேண்டும். அதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் அசைவாடி சில ஜனங்களை இரட்சிக்க வேண்டும். அவர்கள் கூடி வருவதின் மூலம் ஸ்தல சபை உருவாக வேண்டும். ஸ்தல சபை உருவானால் மாத்திரம் போதாது அது ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் மூழ்கி இருக்க வேண்டும். ஆகையால் ஓர் ஸ்தல சபை ஜெபத்திற்குதான் முதல் இடம் கொடுத்திருக்க வேண்டும். ஆதி அப்போஸ்தலர்கள் இப்படித்தான் சொன்னார்கள்.

**அப் 6:4** நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.

ஸ்தல சபை அதன் போதகர்களுக்காகவும், மூப்பர்களுக்காவும் ஜெபிக்க வேண்டும். தலைவர்கள் தரிசனமுடையவர்களாகவும், தைரியமுடையவர்களாகவும், பரிசுத்தமுடையவர்களாகவும், அதிகாரமுடையவர்களாகவும், தேவனை பற்றியும், வேதத்தை பற்றிய அறிவு உடையவர்களாயும் இருத்தல் வேண்டும். மேலும் அவர்கள் பகுத்தறிவு உடையவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாய், உலகத்தையும், பாவத்தையும் விட்டு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை உடையவர்களாக இருக்க வேண்டும். இதுமட்டுமல்லாமல் அன்புள்ளவர்களாயும், பொறுமையும், விசுவாசமும், உண்மை உள்ளவர்களாயும் இருக்க வேண்டும். மேலும் அவர்கள் பண

ஆசை இல்லாதவர்களாகவும், இழிவான இச்சைகள் அற்றவர்களாகவும் இருக்க சபை ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும். ஸ்தல சபையின் ஊழியர்களின் குடும்பத்திற்காகவும், சுகத்திற்காகவும், ஒழுங்குள்ள வாழ்க்கை வாழும்படியாகவும் சபை ஜெபிக்க வேண்டும். ஸ்தல சபையின் போதகரையும் அவர் குடும்பத்தையும் தாக்க பிசாசு பல திட்டங்களை தீட்டுவான். எப்படி தீவிரவாதிகள் சாதாரண மக்களை தாக்குவதைவிட, தலைவர்களை தாக்கி அழிக்க நினைப்பதுபோல, பிசாசு சபை போதகர்களை வீழ்த்த நினைப்பான். ஸ்தல சபை விசுவாசிகள், ஸ்தல சபையின் போதகருக்காகவும், அவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபிக்க வேண்டும். ஸ்தல சபை போதகர்கள் ஜெபப்பங்காளர்களை ஏற்படுத்த வேண்டும்.

ஸ்தல சபையின் ஊழியங்களுக்காய் சபையில் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். சபையில் தலைவர்கள் உருவாக்கப்படவும் அவர்களுக்கு சரியான பயிற்சி கொடுக்கப்படவும், அவர்கள் ஒற்றுமையாய் இருக்கவும், பிரிவினை ஆவிகள் அழிக்கப்படவும், சபை பிரதான கட்டளையை நிறைவேற்றவும் ஜெபிக்க வேண்டும்.

மேலும் சபையின் ஆராதனைக்களுக்காகவும், செய்திகளுக்காகவும், அற்புத அடையாளங்கள் நடைபெறவும், ஜனங்கள் இரட்சிக்கப்படவும், தேவபிரசன்னமும், தேவமகிமையும் சபையில் வெளிப்படவும் ஜெபம் தேவை. இதுமட்டுமல்லாமல் சபை மக்களின் இருதயம் ஆயத்தப்படவும், பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலுக்காகவும் ஜெபிக்க வேண்டும். சபையில் உள்ள சிறுபிள்ளைகள், வாலிபர்கள், பெண்கள், ஆண்கள், விதவைகள், வயோதிபர்களுக்காய் தனித்தனியே ஜெபிக்க வேண்டும். சபையின் மிஷன் ஊழியங்களுக்காகவும், பராமரிப்பு குழுக்களுக்காகவும் இடைவிடாமல் ஜெபம்

ஏற்றெடுக்கப்படல் வேண்டும். இப்படியாக சபையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும், ஊழியர்களுக்காகவும் சபை மக்கள் ஜெபிக்க வேண்டும்.

புதுவாழ்வு சபையில் நடக்கும் ஜெபங்களை குறித்து, சில குறிப்புகளை கவனியுங்கள். சென்னை புதுவாழ்வு ஏ.ஜி சபைஆதிமுதல் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. சபைக்கு ஜெபிக்கும் வாலிபர்களை தேவன் கொடுத்தார். சபைக்கு இடம் இல்லாமல் இருக்கும்போது, பல இரவுகள், திறந்த மைதானத்தில், நடு இரவு, பனி, குளிர், மழை என்று பாராமல் போராடி ஜெபித்ததின் பயனாக பட்டணத்தில் மெயின் ரோட்டில் நல்ல இடத்தை தேவன் சபைக்கு கொடுத்தார். சபையில் உபவாச ஜெபமும், அதிகாலை ஜெபமும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முழு இரவு ஜெபமும் நடைபெற்று வருகின்றன. இது தவிர அவ்வப்போது 40 நாட்கள் உபவாச ஜெபமும், 21 நாட்கள், ஏழு நாட்கள், மூன்று நாட்கள் உபவாச ஜெபங்களும் சபையில் நியமித்து, காலை முதல் இரவு வரை ஜனங்கள் விடாமல் ஜெபிக்க வருவார்கள். மேலும் 24 மணிநேரம் விடாமல் சங்கிலி ஜெபமாக மக்கள் சபைக்கு வந்து ஜெபிப்பார்கள். வீடுகளில் இருக்கும் ஜெபப்பங்காளர்கள் பத்து சங்கிலி ஜெபங்களில் ஜெபக்குறிப்புகளை வைத்து தொடர்ந்து ஜெபிப்பார்கள். பெண்களுக்கென தனி ஜெபக் குழுக்கள், சுமார் 75 இடங்களில் கூடி அந்தந்த வட்டாரத்திற்காவும், ஊழியர்களுக்காவும் ஜெபிக்கிறார்கள். ஊழியர்கள் மாதத்திற்கு இரண்டு நாட்கள் உபவாசம் எடுத்து ஜெபிக்கிறார்கள். இதுபோக சுமார் 1800 பராமரிப்பு குழுக்கள் பட்டணத்தில் பல இடங்களில் கூடி ஜெபிக்கிறார்கள். சில நாட்களில் ஜெப நடைகள் நடந்து ஜெபிக்கிறார்கள். கர்த்தரின் பெரிதான கிருபையால் சபை கட்டிடத்திற்குள் நுழைந்தால் எப்போதும் மக்கள் ஜெபிக்கும் ஜெபசத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். சபை கட்டிடத்திற்குள்

தனியாக ஜெபிப்பதற்கென்று சுமார் 25 சிறு அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் மக்கள் தனித்தனியே ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். பெண்கள் திங்கள் முதல் வெள்ளி வரை குழுவாக சபைக்கு வந்து ஜெபிப்பார்கள். சனிக்கிழமை காலை சபைக்காக உபவாச ஜெபம் நடைபெறுகிறது. வெள்ளிகிழமை மாலையில் அற்புதங்களுக்காய் ஜெபிக்கப்படுகிறது. வருஷத்தில் ஒரு நாள் 25 மணிநேரம் மக்கள் கூடிவந்து காலை 5 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை ஜெபித்து தேவ பிரசன்னத்தையும், வல்லமையையும் உணர்ந்து திரும்புகிறார்கள். சபையில் உள்ள புருஷர்கள் வியாழன் இரவு, அமாவாசை இரவு, பவுர்ணமி இரவு ஆகிய நாட்களில் கூடி ஜெபிக்கிறார்கள்.

இப்படி சபை பலவித குழுக்களாக பல ஜெபத்திட்டங்களை கடைப்பிடித்து ஜெபிப்பதின் மூலம், தேவன் சபைக்கு இடம் கொள்ளாமல் போகுமட்டும் ஆத்துமாக்களை கொண்டு வருகிறார். தேவனுடைய ஆவியின் அசைவாடுதலை நாம் காண முடிகிறது. இது போதாது, இன்னும் சபைக்கு ஜெபஆவி தேவை என்பதை உணர்கிறோம். இதைவிட தேசத்தின் எழுப்புதலை காண வேண்டும். இந்தியாவில் மாபெரும் எழுப்புதல் வரவேண்டும். முஸ்லீம் நாடுகள் சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட வேண்டும். வட இந்தியாவிலும் அண்டை நாடுகளிலும், உலகம் எங்கேயும் கடைசி நாட்களில் ஆவியானவர் ஊற்றப்பட வேண்டும் என்று சபையானது ஜெபிக்க வேண்டும்.

**யோவேல் 2:15-17** சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள், முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள், மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப்

புறப்படுவார்களாக. கர்த்தரின் பணிவிடைக்காராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது கர்த்தாவே நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்திரத்தை ஒப்புக்கொடாதிரும், உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக,

இந்த வசனங்களின்படி பரிசுத்த உபவாச நாளை நியமித்து, ஜனத்தை கூட்டி, சபையை பரிசுத்தப்படுத்தி, முதியோர், பிள்ளைகள், குழந்தைகள், மணவாளன், மணவாட்டி, பணிவிடைக்காரர் எல்லோரையும் கூட்டி ஸ்தல சபை ஜெபித்து பெரிய மறுரூபம் அடைய வேண்டும்.

# 8. முடிவுரை

ஜெபம் என்று சொல்லும்போது பலரும் பலவிதமாக புரிந்துக் கொள்ளுகிறார்கள். அதன்படியே செயல்படுகிறார்கள். அதன் பலனாக ஜெபத்திற்கு பெரும்பாலான மக்கள் பதிலை பெற்றுக்கொள்ளாமலேயே இருக்கிறதை காண்கிறோம். அவிசுவாசிகளுக்கு ஜெபத்தை குறித்து நம்பிக்கையே கிடையாது. மற்றவர்கள் ஜெபித்து தனக்கு ஏதாகிலும் பயன்கிடைக்குமோ என்று தான் எதிர்பார்க்கிறார்கள். இது சரியல்ல. நமக்காக நாமே ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். விசுவாசிகளாக இருக்கிறவர்களாவது ஜெபத்தை பற்றி சரியான அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்படியாக விசுவாசிகள் சரியாக அறிந்து கொண்டு தங்களுடைய ஜெப வாழ்க்கையை அதற்கேற்றார்போல அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த புத்தகத்தின் நோக்கமாகும். ஆகவேதான் சரியாக ஜெபம்

செய்வதுப்பற்றியும், ஜெபமே இல்லாமல் இருப்பதற்கான காரணங்களைப்பற்றியும் ஜெபத்துக்கு வரும் தடைகளைப்பற்றியும் சுருக்கமாக இந்த சிறிய புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அதன்படி ஜெபம் என்பது தேவபிரசன்னத்தை அனுபவித்து, தேவனோடு ஐக்கியம் கொள்வது பற்றியும், தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற அவருடைய சித்தத்தை அறிந்துக் கொள்வதுமேயாகும். தேவனிடம் நாம் கேட்பதும் பெற்றுக் கொள்வதுமான அனுபவம் தான் ஜெபம் என்று நாம் பார்க்கிறோம். இவ்விதமாக ஜெபிக்க முடியாத பாவத்தை ஜெபமின்மை எனலாம். ஜெபிக்கும்போது மனதை பல காரியங்களில் சிதற விடுவதும், வேலைகள், சாப்பாடு, தூக்கம் இவைகளுக்கு முதல் இடம் கொடுத்து, ஜெபிக்காமல் இருப்பதும் ஜெபமின்மையாகும். ஜெபிப்பதற்கு பதிலாக டி.வி பார்ப்பதற்கும், செய்தித்தாள்கள் வாசிப்பதற்கும், நண்பர்களுடன் பேசி மகிழ்வதற்கும், முன்னுரிமை கொடுத்து ஜெபத்தை திட்டமிடாமலும், ஜெபிக்க வாஞ்சையுமில்லாமலும், ஜெப நேரத்தை விட்டு விட்டு சோம்பலும், நிர்விசாரமாய் இருப்பது ஜெபத்திற்கு தடையாக மாறிவிடுகிறது. தூங்கக்கூடிய நிலையில் இருந்துக் கொண்டு ஜெபிக்க முயற்ச்சிப்பதும், மிகக்குறைந்த நிமிஷங்களில் ஜெபித்த ஜெபத்தை முடித்துவிடுவதும்கூட ஜெபத்தை தடைச்செய்யக்கூடியவையாக இருக்கின்றன. எதற்காக ஜெபிக்கிறது என்று தெரியாமலே ஜெபிக்கிறதும், குடும்ப காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பதும், சோர்வுடன் ஜெபிப்பதும், அவிசுவாசமும் நாம் ஜெபிக்கக்கூடாதபடி தடைச்செய்கின்றவையாக இருக்கின்றன. இந்த தடைகளையெல்லாம் மாற்றவும், ஜெபமின்மை என்கிற பாவத்தை மேற்கொள்ளவும் ஒரேவழி ஒழுங்காக ஜெபிப்பதாகும்.

ஒழுங்காக ஜெபிப்பதற்கு திட்டம் வைத்துக்கொண்டு சரியான ஆயத்தத்துடனும், பாவ அறிக்கையுடனும் கர்த்தருடைய

சமூகத்தில் நம்மை ஆராய்ந்து பார்த்து, கர்த்தர் வெளிப்படுத்துகிற காரியங்களை சீர்படுத்தி, நம்முடைய ஜெப வாழ்வை ஒழுங்கு செய்தல் வேண்டும். ஜெபிக்கும்போது தேவன் சொல்வதை அறிந்துக் கொள்ளுவதற்காக வேதத்தை வாசிப்பதும், தியானிப்பதும் அவசியம் தேவை. ஒரு மணி நேரமாவது ஜெபிக்க வழிகாட்டக்கூடிய குறிப்புகளை இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். தேவனுக்கு துதி செய்வதும், நன்றி சொல்வதும், பாவ அறிக்கை செய்வதும், விண்ணப்பிப்பதும், வேதத்தை வாசிப்பதும், தேவசமூகத்தில் காத்திருப்பதும் ஆகிய பல காரியங்கள் இதில் அடங்கும். இப்படிச் செய்வோமானால் நம்முடைய ஜெப வாழ்வு மறுரூபம் அடைய முடியும்.

கர்த்தருடைய ஜெபத்தை கிளிப்பிள்ளைப் பாடமாக வாசிக்காமல் இயேசு காட்டியபடியே அதை ஒரு மாதிரி ஜெபமாக மாத்திரம் வைத்துக் கொண்டு அதின் அர்த்தத்தை உணர்ந்து ஜெபித்தல் நல்லது. இதுபோலவே தேவன் நியமித்த ஆசரிப்பு கூடாரத்தின் பொருளை உணர்ந்து விசுவாசத்துடன் ஜெபிப்பது மிகுந்த பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

பரிந்துபேசும் ஜெபம் மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வொரு விசுவாசியும் தனக்காக மட்டும் ஜெபிப்பதை நிறுத்தி, தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப மற்றவர்களுக்காக பரிந்துபேசி ஜெபம் செய்வது தேவனுக்கு மிகவும் உகந்ததாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தாமே பரிந்துபேசும் ஜெபத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தவர் என்பதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். வேதத்தில் இயேசுகிறிஸ்து பின்பற்றிய ஜெப வாழ்க்கை நமக்கு முன்மாதிரியாக குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் கவனமாக வாசித்து அதை பின்பற்றுதல் நல்லது. இயேசு எப்போதெல்லாம் ஜெபித்தார், எந்தநிலையில் ஜெபித்தார், எந்த சூழ்நிலைகளிலெல்லாம் ஜெபித்தார் என்று நாம் அறிய வேண்டும். இப்படி அவர்

ஜெபித்தபடியினால் பிதா அவரை தனியே இருக்கவிடவில்லை என்று வேதத்தில் பார்க்கிறோம். எனவேதான் அவர் பிதாவின் வல்லமை பொருந்தியவராகவும், அவரில் பரிசுத்தமும், மகிமையும் பொருந்தியவராக இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்திலே இருந்தார். நாமும் அப்படி இருக்க இயேசுகிறிஸ்துவின் ஜெப வாழ்க்கை நமக்கு முன்மாதிரியாக இருக்கிறது. இதுபோலவே மோசே, தானியேல், நெகேமியா, எஸ்றா போன்ற பக்தர்கள் பரிந்துபேசி ஜெபித்ததை வேதத்தில் பார்க்கிறோம். ஜெபமே ஒரு விசுவாசியின் மூச்சாக இருக்க வேண்டும் என்பதைத்தான் தேவன் விரும்புகிறார். ஆகவே ஒரு ஸ்தல சபை எவ்வளவுக்கு அதிகமாக ஜெபிக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாக அது தேவனுடைய ராஜ்யத்தை கட்டக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சபைகளில் ஜெபத்திற்கான பல திட்டங்களை நியமித்து போதகர்களும் தலைவர்களும் ஜெபிப்பார்களானால் சபை தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தக் கூடியதாக மாறும். சபை விசுவாசிகள் போதகருக்காகவும், தலைவர்களுக்காகவும் உடன் விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிற ஜெபப்பங்காளர்களாக மாறினால் சபையிலே அற்புதங்களும், அடையாளங்களும் பெரிதும் காணப்பட முடியும். இந்த கடைசி காலத்தில் வாழும் சபைகளுக்கு இப்படிப்பட்ட தரிசனம் வேண்டும். அப்போஸ்தலர் காலத்தில் போலவே விசுவாசத்திலும் ஜெபத்திலும் நமது சபைகளும் வல்லமையுடன் ஸ்திரப்படும். அப்படியானால் தேவநாமம் மகிமைப்படும். தேவராஜ்யம் கட்டப்படும். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

** ** **

பாஸ்டர் D. மோகன்

ஆசிரியரைப்பற்றி........

இந்நூலின் ஆசிரியர் Rev. D. மோகன் அவர்கள், தேவ அழைப்புப் பெற்றவரும், தேவனால் சென்னையில் மட்டுமல்லாமல் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆப்ரிக்கா, கொரியா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இலங்கை, சிங்கப்பூர், பெல்ஜியம், கனடா, அரபு நாடுகள் போன்ற உலகின் பல பாகங்களிலும், தேவனால் வல்லமையாய் உபயோகப்படுத்தப்பட்டு வரும் தேவதாசனும் ஆவார். தேவதரிசனத்தின்படி 28 ஆண்டுகளாக சென்னையில் புதுவாழ்வு அசெம்பிளி ஆப் காட் சபையின் தலைமை போதகராக தேவ மகிமைக்கென்று ஊழியம் செய்து வருகிறார். இந்த சபையில் தற்சமயம் ஏறத்தாழ 30,000 விசுவாசிகள் தேவனை ஆராதிக்கிறார்கள்.

இந்த சபை முழுக்க முழுக்க ஜெபத்திலும், விசுவாசத்திலும் கட்டப்பட்ட ஒன்றாகும். ஆகவே தேவன் தந்த கிருபையினாலும், ஆயிரக்கணக்கானோர் ஜெபவாழ்வில் மறுரூபமடைய வேண்டும் என்ற பாரத்துடன், Rev. D. மோகன் அவர்கள் இந்நூலை தேவநாமம் மகிமைக்காக வடிவமைத்து வெளியிட்டிருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.